






தமிழ்நாடு
ஊரகப் புத்தாக்கத்
திட்டம்

# மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக் கையேடு

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

# மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக் கையேடு

## - உள்ளடக்கம் -


| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண். |
| --- | --- | --- |
| 1 | தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் – அறிமுகம் | |
| 2 | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்திற்கான யுத்திகள் | |
| 3 | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் | |
| 4 | **மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்**<br>4.1 தயாரிக்கும் குழு அமைத்தல்<br>4.2 ஆயத்தக் கூட்டம்<br>4.3 கிராம நடை பயணம்<br>4.4 மாவட்டப் பகுப்பாய்வினை சரிபார்த்தல்<br>4.5 தொழில் ஆய்வு கணக்கெடுப்பு<br>4.6 இலக்கு நோக்கிய குழு விவாதம் | |
| 5 | **முதலீட்டுத் திட்டங்கள்**<br>5.1 கிராம முதலீட்டுத் திட்டம்<br>5.2 வட்டார முதலீட்டுத் திட்டம்<br>5.3 மாவட்ட முதலீட்டுத் திட்டம்<br>5.4 மாநில முதலீட்டுத் திட்டம் | |
| 6 | தகவல் தொடர்பு தொழில் நுட்பம் | |
| 7 | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினரின் பொறுப்புகள் | |
| 8 | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட குழுவிற்கான பயிற்சிகள் | |
| 9 | கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பொறுப்புகள் | |
| 10 | **இணைப்புகள்**<br>10.1 மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்<br>10.2 கிராம தொழில் முனைதல் ஆய்வுக்கான தகவல்களை சேகரிப்பதற்கான அடிப்படை காரணிகள்<br>10.3 உற்பத்தியாளருக்கான கேள்வித்தாள்<br>10.4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான கேள்வித்தாள்<br>10.5 கிராம நடை பயணத்தின் போது கேட்கப்படும் மாதிரி கேள்வித்தாள்<br>10.6 திட்ட வழிமுறைகள்<br>10.7 மாதிரி கிராம முதலீட்டுத் திட்டம் | |

# தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

# (Tamilnadu Rural Tranformation Project - TNRTP)

## 1. அறிமுகம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமானது, வறுமை ஒழிப்பு என்னும் செயல்பாட்டையும் தாண்டி ஊரக சமுதாயத்தில் வளம் மற்றும் நிலைத்தத்தன்மையினை உருவாக்குவதோடு, தொழில் மேம்பாடு மூலம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள ஒரு மாபெரும் திட்டமாகும்.

இத்திட்டமானது தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் (அரியலூர், தர்மபுரி, கன்னியாகுமரி, பெரம்பலூர், தஞ்சாவூர், சென்னை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக) புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்படாத 120 வட்டாரங்களில் உள்ள 3,994 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

### நோக்கங்கள்

**"தமிழ்நாட்டிலுள்ள குறிப்பிட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகள் உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியன தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்"**

### திட்ட செயலாக்க பகுதிகள்

இத்திட்டமானது 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் 3,994 கிராம ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

| வ.எண். | பகுதி | செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் எண்ணிக்கை | செயல்படுத்தப்படும் ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பகுதி I | 37 | 1,358 |
| 2. | பகுதி II | 83 | 2,636 |
| மொத்தம் | | **120** | **3,994** |

## நிதிப் பங்கீடு

இத்திட்டத்திற்கான மதிப்பீடு நிதி **142.8** மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும். இந்திய ரூபாயில் தற்போது ரூ.**918.20** கோடியாகும். இத்திட்ட நிதியானது உலக வங்கிக்கும், தமிழ்நாடு அரசுக்கும் **70:30** என்ற நிதி விகிதத்தில் அமைந்துள்ளது. இதில் உலக வங்கி கடனுதவி ரூ.**642.74** கோடி மற்றும் தமிழக அரசின் பங்களிப்பு ரூ.**275.46** கோடி ஆகும்.




## திட்ட பயனாளிகள்

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், வளங்கள் மற்றும் திறன்களைக் கொண்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களே இத்திட்டத்தின் முதன்மை இலக்கு பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயனாளிகள் ஆவர்.

| வ. எண். | செயல்பாடுகள் | பயனாளிகள் |
| --- | --- | --- |
| 1 | 6,000 உற்பத்தியாளர் குழுக்கள் (6000* 50 பேர்) | 3,00,000 |
| 2 | 1000 தொழில் குழுக்கள் (1000 *25 பேர்) | 25,000 |
| 3 | தனிநபர் தொழில் நிறுவனங்கள் | 6,620 |
| 4 | திறன் பயிற்சி | 80,000 |
| | **மொத்தம்** | **4,11,620** |

*"இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் 4,11,620 மக்கள் பயன் பெறுவர்"*

## 2. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்திற்கான யுத்திகள்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் முக்கிய யுத்திகளில் ஒன்று “மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்'' ஆகும். சூழல் மேம்பாட்டுடன் கூடிய ஊரக தொழில் முனைதலை மேம்படுத்தும் நோக்கில், திட்டத்தில் பல்வேறு மட்டங்களில் தொழில் விரிவாக்கத்திற்கு ஏற்ற முயற்சிகளுடன் தொழில் முனைதலை ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான ஆலோசனைக் கூட்டங்களில் கிடைக்கும் படிப்பினைகள், மதிப்புத் தொடர் ஆய்வுகள், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி போன்றவற்றின் மூலம் சூழல் மேம்பாட்டுடன் கூடிய ஊரகத் தொழில் முனைதலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து சமுதாயத்தின் பங்கேற்போடு திட்டமிட வேண்டும்.



தனி நபர் தொழில்கள் (நுண், குறு மற்றும் சிறு தொழில்கள்) மற்றும் கூட்டுத் தொழில்கள் (உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் நிறுவன குழுக்கள் மற்றும் கூட்டு உற்பத்தியாளர் குழுக்கள்) போன்றவை இத்திட்டத்தால் ஊக்குவிக்கப்படும்.

திட்டத்தின் முதல் படியாக, மாவட்ட அளவிலான பகுப்பாய்வு ஆலோசனைக் கூட்டங்களின் மூலம் முன்னுரிமை பெற்ற பொருட்களை அடையாளம் காணுதல் மற்றும் தொழில் தொடர்பான துணைப்பிரிவுகள் (துணைத் தொழில்கள் (அல்லது) சார்புத் தொழில்கள்) ஆகியவற்றை சமூக நலன், தொழில் உற்பத்தியின் போக்குகள் (Trends), தேசிய மற்றும் மாநில முன்னுரிமைத் தொழில்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் வாய்ப்புகள் அடிப்படையில் மாவட்ட பகுப்பாய்வினை (District Diagnostics Study) தயாரிப்பது மாவட்ட திட்ட செயலாக்க அலகின் முக்கியப் பணியாகும்.

திட்டத்தின் இரண்டாவது படியாக, அடையாளம் முன்னுரிமையில் காணப்பட்ட வளர்ச்சி பொருட்கள் மற்றும் வளர்ச்சிக்கு தந்த தொழில் வாய்ப்புகள் அடிப்படையில் இந்தத் திட்டத்தின் வாயிலாக மேற்கண்ட பொருட்கள் மற்றும் கண்டறியப்பட்ட சார்புத் தொழில்களை மதிப்பு தொடர் ஆய்வு (Value Chain Analysis) நடத்த வேண்டும். இந்த ஆய்வானது தொழில் முதலீடுகளையும், தொழில் வாய்ப்பு உதவிகளை (Intervention) மிகப் பெரிய எண்ணிக்கையில் செய்வதற்கான வாய்ப்புகளையும், மாநில வளர்ச்சிக்கான சாத்தியங்களையும் (Potential)

கண்டறிய உதவும். இந்த மதிப்பு தொடர் ஆய்வை திட்டத்தால் அனுமதிக்கப்படும் ஒரு நிறுவனம் மேற்கொள்ளும்.

திட்டத்தின் மூன்றாவது படியாக, முதன்மைப் பங்காளர்களாக உள்ள சமுதாய மக்களைக் கொண்டு, மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கிராம முதலீட்டுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

# 3. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்

# (Participatory Growth Plan - PGP)

"மக்களின் வளர்ச்சியை உள்ளடக்கிய முதலீட்டுத் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் தொழில் முனைதலை ஊக்கப்படுத்துவது" என்பது மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டமிடுதலின் நோக்கம் ஆகும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் கிராமம், வட்டாரம், மாவட்ட மற்றும் மாநில அளவில் தயார் செய்யப்படும்.

கிராம அளவிலான திட்டமிடுதலில் அக்கிராம மக்கள் பங்கேற்று, திட்டமிடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு கண்டறியப்பட்ட பொருள்கள் மற்றும் சார்புத் தொழில்கள் அக்கிராமத்தில் உள்ளனவா என்றும், அவை மூலம் தொழில் முனைதல் மேம்பாட்டிற்கான வாய்ப்புள்ள சாத்தியக் கூறுகள் ஏதேனும் உள்ளனவா என்றும் மதிப்பிடுவார்கள்.



## மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டமிடுதல்

திட்ட செயல்பாட்டு வழிமுறைகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் குறிப்பிட்ட கால அட்டவணையோடு ஒரே கட்டத்தில் நடத்தப்படும். இத்திட்டமிடுதல் மூலம் தற்போது சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள வாழ்வாதாரங்களை முயற்சிகளை கண்டறியும் வகையில் தேவையான தகவல் திரட்டுதல், உண்மைக் காரணிகள் அறிதல் மற்றும் தொழில் முனைதலில் பல்வேறு பங்காளர்களை இணைத்தல் ஆகியவற்றின் மூலம் இவ்வளர்ச்சித் திட்டமிடல் செயல்படுத்தப்படும்.

# மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்

## முதற்கட்டம்

**கிராம நடை பயணம் – தகவல் சேகரித்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான நடை**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் கிடைக்கும் தகவல்கள்

கிராமத்தைப் பற்றிய முழுமையான தகவல்களை கிராம ஊராட்சி செயலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் பெறுதல்

கிராமம் வாரியாக மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்

## இரண்டாம் கட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுடன் கூட்டம் நடத்துதல்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குதல்

கிராம நடைப் பயணத்தில் கண்டறிந்தவற்றை பகிர்ந்து கொள்ளுதல்

மாவட்ட பகுப்பாய்வு விபரங்களை விளக்குதல்

## மூன்றாம் கட்டம்

உற்பத்தியாளர், தொழில் முனைவோர் ஆகியோருடன் இலக்கு நோக்கிய குழு விவாதம்

சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுடன் இலக்கு நோக்கிய குழு விவாதம்

இளைஞர்களுடன் மையப்படுத்தி நடைபெறும் இலக்கு நோக்கிய குழு விவாதம்

தொழில் முனைவோர்கள், விவசாயிகள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடல்

## நான்காம் கட்டம்

கிராம ஊராட்சி முதலீட்டுத் திட்டம் தயாரித்தல்

கிராமக் கூட்டங்களில் கிராம முதலீட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல்

## 4.1 மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்திட குழு அமைத்தல்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டமானது சமூக வல்லுநர்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்பு பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவால் மேற்கொள்ளப்படும். தேர்வு செய்யப்பட்ட குழுவினருக்கு திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

இக்குழுவானது 7 உறுப்பினர்களை உள்ளடக்கியது.

1) சமூக வல்லுநர் (CP) – 3 பேர்
2) சுய உதவிக் குழு பிரதிநிதி – ஒருவர்
3) கிராம வறுமை ஒழிப்புச் சங்கப் பிரதிநிதி – ஒருவர்
4) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (மகளிர்) பிரதிநிதி – ஒருவர்
5) கிராமத்தில் உள்ள தொழில் முனைவோர் – ஒருவர்

ஒரு குழுவானது குறைந்தது 5 ஊராட்சிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயார் செய்யும் பணிகளை மேற்கொள்ளும். இக்குழுவில் சமூக வல்லுநர்களைத் தவிர மற்ற பிரதிநிதிகள் அந்தந்த ஊராட்சி அளவில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். சமூக வல்லுனர்களில் ஒருவர் மிஷன் அந்தியோதயா கைபேசி செயலி மூலம் கணக்கெடுப்பு செய்தவராக கட்டாயம் இருப்பதை வட்டார திட்ட செயலாக்க அலகு உறுதி செய்ய வேண்டும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் குழுவில் குறைந்தது 4 பெண் பிரதிநிதிகள் இருப்பதையும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளதையும் வட்டார திட்ட செயலாக்க அலகு (BPMU) உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட மாவட்ட திட்ட செயலாக்க அலகின் (DPMU) உதவியுடன், வட்டார திட்ட செயலாக்க அலகு (BPMU) மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள், திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை மற்றும் திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் வெளிப்பாடுகள் ஆகியவற்றைப்பற்றி இக்குழுவிற்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

திட்டம் தயாரிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவே தேவையான முன்னேற்பாடுகளையும், தேவையான இரண்டாம் கட்டத் தகவல்களை வழங்குவதையும்,

தேவையான உபகரணங்கள் தயார் நிலையில் இருப்பதையும் வட்டாரத் திட்ட செயலாக்க அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். இது மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தை, கவனத்துடன் செய்வதற்கு உதவியாக இருக்கும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரித்தலுக்கான தயாரிப்பு நிலை மற்றும் ஆயத்தப் பணிகளுக்கு வட்டார திட்ட செயலாக்க அலகு பொறுப்பேற்க வேண்டும். குழு தொடர்ந்து தயாரிப்புப் பணிகளில் ஈடுபடவும், தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடவும் இந்தத் தகவல்கள் உதவிகரமாக இருக்கும்.

## 4.2 திட்டம் தயாரிப்பதற்கான ஆயத்தக் கூட்டம்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட திட்ட செயலாக்க அலகானது, கிராம ஊராட்சியின் தலைவர்களுக்கு, மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள், திட்டம் தயாரிப்பதில் கிராம ஊராட்சி நிர்வாகத்தின் பங்கினையும், அதன் அவசியத்தையும் விளக்கி தகவல் தெரிவிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் வட்டார அளவிலான திட்ட ஆயத்தக் கூட்டங்களை மாவட்ட திட்ட செயலாக்க அலகு நடத்த வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள், சமுதாய அளவிலான அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் ஆகியோரை இக்கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் நடைமுறைகள், அவரவர்களின் பொறுப்புகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் திட்டத்தைச் செயல்படுத்தி ஆக்கப்பூர்வமான வெளிப்பாடுகளைக் கொண்டு வருதலைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டும். இந்த கூட்டத்தின் முடிவில் ஊராட்சிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் செயல்படுவதற்கான செயல் திட்டம் இறுதி செய்யப்படும்.

### மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் பயிற்சியில் கிராம அளவிலான முதன்மைத் தகவல்களை சேகரித்தல், மாவட்ட அளவிலான பகுப்பாய்வினை, மதிப்புத் தொடர் ஆய்வின் மதிப்பீடும் செய்து மற்றும் அதன் வாயிலாக உருப்பெறும் தொழில் முனைதல் மேம்பாட்டு வாய்ப்புகளையும் கொண்டு கிராம முதலீட்டுத் திட்டங்களை தயார் செய்ய வேண்டும்.

கிராம அளவிலான திட்டமிடுதலுக்கு அக்கிராமத்தில் அடங்கிய அனைத்துக் குடியிருப்புகளில் இருந்தும் பிரதிநிதிகள் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்து, அதன் மூலம் மதிப்பிடுதல், ஆய்வு செய்தல், முதலீடுகளுக்கு திட்டமிடுதல் போன்றவற்றில் அவர்களைக் கலந்து கொள்ளச் செய்வதன் மூலம் இத்திட்டமானது அனைவரையும் உள்ளடக்கிய அனைத்து வளங்களையும் உள்ளடக்கிய திட்டமிடுதலாக அமையும்.

தொழில் ஆய்வுகள், திட்டமிடுதல் மற்றும் தொழில் முனைவு மேம்பாடு போன்ற பல்வேறு கட்ட நடவடிக்கைகளில் சமூக ரீதியாக பின்தங்கிய மக்களின் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் திட்ட செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

## கிராம அளவிலான தகவல் சேகரிப்பு

### 1. இரண்டாம் நிலைத் தகவல்கள்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக்குழு மற்றும் வட்டார திட்ட செயலாக்க அலகு (BPMU) இரண்டாம் நிலைத் தகவல்களைப் பெறுவதற்கு பொறுப்பாவர். மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயார் செய்தலுக்கு முன்பே கீழ்கண்ட தகவல்களைச் சேகரித்தல் என்பது முதன்மையான தேவையாகும்.

- ✓ கிராமத்தின் மக்கள் தொகை விவரங்கள்
- ✓ கிராமத்தின் நிலம் தொடர்பான தகவல்கள்

  (கிராம நிர்வாக அலுவலர், கிராம ஊராட்சி செயலர் ஆகியோரிடம் இத்தகவல்களைப் பெறலாம்)

### 2. வட்டார அளவிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரங்கள்

வட்டார அணித்தலைவர் மற்றும் பொறுப்பு செயல் அலுவலர் இத்தகவல்களைப் பெறுவதற்கு பொறுப்பாவர். (Block Team leader and Block Nodal Executive Officer). மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயார் செய்தலுக்கு முன்பே கீழ்கண்ட துறைகளின் விவரங்கள் வட்டார வளர்ச்சி அலுவலகம், வட்டார அளவிலான வேளாண் அலுவலர், கால்நடைத் துறை அலுவலர், தோட்டக்கலை அலுவலர் ஆகியோரிடம் இத்தகவல்களைப் பெறலாம்.

- ✓ சமூகக் கட்டமைப்பு விவரங்கள்
- ✓ வட்டார வரைபடம்
- ✓ வேளாண்மை சார்ந்த தகவல்கள்

- ✓ தோட்டக் கலை சார்ந்த தகவல்கள்
- ✓ கால்நடை பராமரிப்பு சார்ந்த தகவல்கள்

**3. மாவட்ட அளவிலான விபரங்கள்**

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கு ஆயத்தமாகும் போதே கீழ்க்கண்ட தகவல்களை மாவட்ட திட்ட செயலாக்க அலகுகள் திரட்டி வைத்திருக்க வேண்டும்.

- ✓ சமுதாய அடிப்படையிலான அமைப்புகள்
- ✓ சுய உதவிக் குழுக்கள்
- ✓ சுய உதவிக் குழுக்களின் இணைந்துள்ள குடும்பங்கள் மற்றும் அவர்களின் விவரங்கள்
- ✓ கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்
- ✓ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு
- ✓ ஒத்த தொழில் குழுக்கள்
- ✓ தொழில் முனைதல் மற்றும் உற்பத்தியாளர்களின் சங்கங்கள் மற்றும் அவற்றுடன் இணைப்பு பெற்ற அமைப்புகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட மற்றும் வட்டார திட்ட செயலாக்க அலகுகளினால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் தொடர்பான விவரங்கள், தற்போதைய நிலை மற்றும் சமூகக் குழுக்களின் விவரங்கள் போன்றவை திட்டத் தயாரிப்புக் குழுவிடம் இருக்க வேண்டும்.

**4.** மாவட்ட பகுப்பாய்வினை (DDS) சுருக்கமாகவும், தெளிவாகவும் வட்டார திட்ட செயலாக்க அலகிடமும், மக்கள் பங்கேற்பு முறையிலான வளர்ச்சித் திட்ட தயாரிப்புக் குழுவிடமும் தயார் நிலைப் படிவங்களாக (Ready Reckoner) இருக்க வேண்டும்.

எந்த ஒரு கிராம ஊராட்சியிலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தலுக்கு முன், முதன்மைத் தேவைகளாக இத்தகைய விவரங்கள் இருக்க வேண்டும்.

## முதல் கட்ட செயல்பாடுகள் :

### சமுதாய மக்களுக்கு விளக்கப் பயிற்சி அளித்தல்

சமுதாய மக்கள், கிராம ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் கிராம அளவில் செயல்படும் மக்கள் அமைப்புகள் போன்றவற்றிற்கு, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் பற்றியும், அதன் நோக்கங்கள் பற்றியும் விளக்கப்பட வேண்டும்.

பயிற்சியானது,

- விளக்கப் படங்கள்
- கதை அட்டைகள்
- சிறிய குழு விவாதங்கள் மூலம் விளக்கப்பட வேண்டும்.

இந்தப் பயிற்சியானது சமுதாய மக்களை செயல் திறத்துடனும், ஆக்கத்துடனும், ஈடுபாட்டுடனும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டமிடுதலில் பங்கேற்பாளர்களாக பங்களிக்க வைக்கும்.

## 4.3 தகவல் சேகரித்தல் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான நடைப்பயணம்

கிராமத்தைப் பற்றியும், அங்கு தற்போது நடைபெற்று வரும் விவசாயம், தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் வகைகள் பற்றி அறிந்து கொள்ளுதலே இந்த நடைப்பயணத்தின் நோக்கமாகும். இவ்வாறு கிராமத்தை சுற்றி நடந்து வருவதன் மூலம் அக்கிராமத்தின்

- பல்வேறு பகுதிகள், நிலப்பரப்புகள்
- விளை நிலங்கள்
- சிறு தொழில்கள் / தொழில் கூடங்கள்
- நீர் நிலைகள்
- உள்ளூர் உள் கட்டமைப்பு வசதிகள்
- வங்கிகள்
- பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை பற்றியும்
- மற்றும் திட்டம் தொடர்பான இதர செயல்பாடுகள் அங்கு நடைபெறுகிறதா என்பதைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

கிராம மக்களுக்கு அக்கிராமத்தைப் பற்றிய அறிமுகம் அதிக அளவில் இருப்பதால் அவர்களுக்கு அங்குள்ள வளங்கள், வாய்ப்புகள், வாழ்வாதாரத்தில் உள்ள சவால்கள், தடைகள்

மற்றும் அவர்களின் வருமானம் போன்றவை பற்றி நன்கு அறிந்திருப்பார்கள். எனவே, மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத் தயாரிப்புக் குழுவானது முன்கூட்டியே கிராம நடை பயணத்தின் நோக்கங்கள் குறித்தும் கிராம மக்களுக்கு தெரியப்படுத்தி, அந்த நிகழ்வில் அவர்களையும் கலந்து கொள்ளச் செய்து அவர்கள் தரும் விவரங்களையும், வழிகாட்டுதல்களையும் குறித்துக் கொண்டு அதன்படி செயல்பட வேண்டும். கிராம மக்களால் அப்போது அளிக்கப்படும் விவரங்களையும், குழுவால் நோக்கப்படும் தரவுகளையும் ஆவணப்படுத்திக் கொள்ள வேண்டும்.



கிராம நடைபயணத்தின் போதே தொழில் கூடங்களைப் பார்வையிடுதல், பல்வேறு வகையிலான தொழில் முனைவோர்களுடனான சந்திப்புகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடல் போன்றவற்றையும் செய்ய வேண்டும்.

மேலும், கிராம நிர்வாக அலுவலர், கிராம ஊராட்சி செயலாளர் ஆகியோருடனான சந்திப்பும், கலந்துடையாடலும் இச்செயல்பாடுகளுக்கு மிக உதவிகரமாக இருக்கும்.

கிராம நடைப் பயணத்தின் போது கண்டறியப்பட்ட விவரங்களை ஆவணப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த ஆவணப்படுத்தும் பணியானது மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிக்கும் குழு மற்றும் வட்டார திட்ட செயலாக்க அலகின் முழுமையான பொறுப்பாகும்.

கிராமத்தில் இருக்கும் குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டு அல்லது மூன்று குழுக்களாக, சிறிய அளவிலான ஊராட்சிகளாக இருப்பின் ஒரு நாளிலும், நடுத்தர அல்லது பெரிய ஊராட்சிகளாக இருப்பின் இரண்டு நாளிலும் கிராம நடைபயணத்தை முடிக்க வேண்டும்.

### கிராம நடைபயணத்தின் வெளிப்பாடுகள்

- கிராம நடைபயணம் முடிந்த பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள், தொழில் முனைவோர் மற்றும்

இளைஞர்கள் போன்ற பங்காளர்களுடன் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் நோக்கங்கள் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும்.

- வளங்கள் / ஆதாரங்கள், தொழில்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள், நிலங்களின் பயன்பாடு மற்றும் சாகுபடி முறைகள் ஆகியன ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
- மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையை (DDS) கலந்துரையாடல் மூலம் மதிப்பிட வேண்டும். மேலும் கிராமத்தின் பொருட்கள் மற்றும் சார்புத் தொழில்கள் பற்றி மக்களுடன் கலந்துரையாடி, அவற்றை முன்னுரிமைப்படுத்தி வரிசைப்படுத்த வேண்டும்.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சமுதாயம் சார்ந்த அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றை மதிப்பிட்டு, அவற்றை உறுதி செய்ய வேண்டும்.
- குழு விவாதங்களின் வாயிலாக சமுதாய மக்களின் ஆர்வம், எதிர்பார்ப்புகள், கடைப்பிடிக்கப்பட்டிருந்த வாழ்வாதார முறைகள், அவற்றின் தற்போதைய நிலை, மாறிவரும் சூழ்நிலைகள் போன்றவற்றையும் கண்டறிய முடியும்.

## 4.4 மாவட்ட பகுப்பாய்வினை சரிபார்த்தல்

மாவட்ட பகுப்பாய்வின் மூலம் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தொகுக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சார்புத் தொழில்களை கிராமத்தின் தொழில் வளர்ச்சியை (Perspective) கருத்தில் கொண்டு அக்கிராம மக்களுடன் கலந்துரையாடலுக்கு பிறகு, அவற்றை சரிபார்த்திட வேண்டும்.

இந்த சரிபார்த்தலானது சமுதாய மக்களுடனான கலந்துரையாடல், கிராம நடைபயணத்தின் போது சந்தித்த தொழில் முனைவோர், உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல்கள் மூலமாக செய்யப்பட வேண்டும்.

அடையாளம் காணப்பட்ட பொருட்களில், எந்தப் பொருளுக்கு அதிக உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை, எந்தப் பொருள் அதிக தொடர் உற்பத்தி ஆகிறதோ அல்லது எந்தத் தொழில் அதிகளவில் நடக்கிறதோ அவை தற்போது நிலவும் தொழில் சூழ்நிலையைக் கொண்டு வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

வரிசைப்படுத்தப்பட்ட தொழில்களை அதிகம் வளர்ச்சி அடையச் செய்வதற்கும் மற்றும் நிலைத்தத் தன்மை அடைவதற்கும் (Stand alone activity) கிராம நடைபயணத்தின் போதும், சமுதாய மக்களுடன் கலந்துரையாடும்போதும் கண்டறிந்து அது தொடர்பாக விவசாயிகள், தொழில் முனைவோர் ஆகியோரை குழு விவாதங்களுக்கு அழைக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, மாம்பழ நாற்றுப் பண்ணை, பால் பண்ணைத் தொழில், தினை போன்ற சிறு தானிய உற்பத்தி, ஆடை உற்பத்தி மற்றும் மல்லிகைப் பூ உற்பத்தி ஆகியவற்றை எடுத்துக் கொண்டால், அவைகளில் எந்தத் தொழிலில் அதிகம் பேர் ஈடுபடுகிறார்களோ, எந்தத் தொழில் அதிகம் வளர்வதற்கு வாய்ப்புகள் உள்ளதோ அதனடிப்படையில் மேற்கண்ட தொழில்களை வரிசைப்படுத்தி (ranked) அதில் ஈடுபடுவோரை குழு விவாதத்திற்கு அழைக்க வேண்டும்.

## 4.5 தொழில் ஆய்வு கணக்கெடுப்பு

வட்டார அளவிலான திட்ட செயலாக்க அலகால் வழி நடத்தப்படும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிப்புக் குழுவிலுள்ள தொழில் சமூக வல்லுநர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட கிராமத்தில் நடைபெறும் தொழில்களைப் பற்றியும், அது தொடர்பான தகவல்கள் மற்றும் விவரங்களையும் கணக்கெடுப்பார்கள். இதன் மூலம் எந்தெந்த தொழில்கள் விரிவுபடுத்தக் கூடிய வாய்ப்புகள், மதிப்புக் கூட்டுத் தொடர் தொழில் வாய்ப்புகளை ஒன்றிணைத்தல் மற்றும் திறன் பயிற்சிகளின் தேவைகள் போன்றவற்றையும் விளக்கமாக அறிய முடியும்.

இந்தக் கணக்கெடுப்பு இறுதியில், அக்கிராமத்தில் வசிப்போரில் அங்கேயே தொழில் முனைவோராக உள்ளோரையும், அக்கிராமத்திற்கு வெளியே தொழிலை நடத்துவோரையும் அடையாளப்படுத்தி பட்டியலிடப்படும்.

சமூக வல்லுநர்கள் கிராம அளவில் உள்ள தகவல்களான,

- உற்பத்திப் பொருட்கள்
- உற்பத்தியாளர்கள்
- உற்பத்தித் திறன்
- தொழில்கள்
- வாழ்வாதாரங்கள்
- வளங்கள்

ஆகியவற்றைத் தொகுப்பதோடு, மாவட்ட பகுப்பாய்வு (DDS) மற்றும் மதிப்புக் கூட்டுத் தொடர் ஆய்வின் முடிவுகளோடு ஒன்றாக இணைத்து குழு கலந்துரையாடலுக்கு ஆயத்தமாவார்கள். பின்னர் அனைத்து அறிக்கைகளையும் தொகுத்து மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட குழுவிற்கு (PGP) சமூக வல்லுநர்கள் வழங்க வேண்டும்.

## 4.6 இலக்கு நோக்கிய குழு விவாதம் / கலந்துரையாடல்

### 4.6.1.உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்புக் குழுவானது, பெரிய அளவில் சந்தையில் உள்ள பொருளின் உற்பத்தியாளர்கள், அது தொடர்பான சிறப்புத் தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் அதன் சார்புத் தொழிலில் ஈடுபடும் தொழில் முனைவோர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும்.

விவாதம் நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியவற்றை உற்பத்தியாளர்களுக்கும், அதில் ஈடுபடும் பிற பங்காளர்களுக்கும் இக்குழு (PGP) முன்கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும். கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், விவாதம் தொடர்பான ஆவணங்களை மற்றும் விவரங்களைத் தருதல் போன்றவற்றிற்கு பங்கேற்பு முறையிலான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் குழுவே பொறுப்பேற்க வேண்டும்.

இந்தக் கலந்துடையாடல்கள் வாயிலாக இக்குழுவானது (PGP) கீழ்க்கண்டவற்றைப் பற்றி கற்றுக் கொள்வதுடன், அவற்றை ஆவணப்படுத்தவும் வேண்டும்.

- செய்யும் தொழில்கள் மற்றும் அது தொடர்பான செயல்பாடுகள்
- அதன் தற்போதைய நிலை
- தொழிலில் காணப்படும் பிரச்சினைகள்
- தொழிலிலுக்குக் கிடைக்கும் உதவிகள் (Intervention)
- அரசின் திட்டங்கள் மற்றும் அதன் பங்கு
- பங்குதாரர்களின் தொழில்கள்
- பாலின நிலைமை
- சமூக உள்ளடக்கம்
- சுற்றுச்சூழல் காரணிகள்
- தொழில்களின் செயல்முறை
- தொழில்களுக்கான பயிற்சிகள்
- தொழிலில் ஈடுபடும் முக்கிய நபர்கள்
- பொருளைப் பற்றிய அறிவு
- தொழில் நடவடிக்கைகள்
- தொழிலின் உள்ளூர் நிலைமையைப் பற்றிய அறிவு
- தொழிலின் மாநில மற்றும் தேசிய நிலைமையைப் பற்றிய அறிவு

கலந்துரையாடலுக்கான காலம் இரண்டு மணி நேரத்திற்கு மேல் இருக்கக் கூடாது. இவ்விவாதத்தின் வெளிப்பாடாக, கிராமத்தின் வாய்ப்புள்ள தொழில்களின்,

- உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை
- சாகுபடிப் பரப்பளவு
- குறிப்பிட்ட தொழில் செயல்பாடுகளுடன் இணக்கமான மக்களின் எண்ணிக்கை
- குறிப்பிட்ட தொழில் செயல்பாடுகளை மேற்கொள்ளும் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- மதிப்புக் கூட்டுத் தொடர் தொழில்களில் இயங்குபவர்களின் எண்ணிக்கை
- குறிப்பிட்ட சார்புத் தொழிலின் மதிப்புக் கூட்டுத் தொடரில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றைப் பற்றி அறியலாம்.

### 4.6.2.தொழில் முனைவோர்களுடனான கலந்துரையாடல்

வளர்ச்சித் திட்ட தயாரிப்புக் குழுவால் நடத்தப்பட்ட கிராம தொழில்கள் கணக்கெடுப்பு மூலம் பெறப்பட்ட கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொழில் முனைவோருடன் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும்.

- தொழில்களின் தன்மை
- வணிக நடவடிக்கைகள்
- சந்தை வாய்ப்புகள்
- பயிற்சிகள் மற்றும் உதவிகள்
- தொழில் பதிவுச் சான்றுகள்
- வணிக அணுகுமுறைகள்
- முதலீடுகள்
- வேலைவாய்ப்புகள்
- தொழிலின் விற்பனை அளவு (Turnover)

தொழில் முனைவோர்களுடனான கலந்துரையாடலை மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்புக் குழுவே நடத்த வேண்டும். விவாதம் நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியவற்றை தொழில் முனைவோர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட வேண்டும்.

இந்த கலந்துரையாடல் நேரமானது இரண்டு மணி நேரத்திற்கு மேல் இருக்கக் கூடாது.

### 4.6.3.கலந்துரையாடலின் வெளிப்பாடு

- தொழில்களின் வகைகள் (விவசாய பொருள் வாரியாக உற்பத்தி / தொழில், வியாபாரம், சேவைத் தொழில்)
- தொழில்களின் இனங்கள் (நுண் தொழில், குறுந்தொழில், சிறு தொழில்)
- தொழில் விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள்
- பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வுகள்

- நிதியினைப் பெறுவதற்கான வழிகள்
- துணை சேவைகள் பெறுவதற்கான வழிகள்
- கிராமத்தில் உள்ள தொழில்கள்

### சமுதாயம் சார்ந்த அமைப்பு நிர்வாகிகளுடன் கலந்துரையாடல்

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்
- சுய உதவிக் குழுக்கள்
- ஒத்த தொழில் குழுக்கள்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினர் மக்கள் அமைப்புகளான, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுய உதவிக் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள் இவைகளின் செயல்பாடுகள், நிதி பெறுவதற்கான வழிகள், கடன் திருப்பச் செலுத்தும் நிலை, சொத்து உருவாக்கம், உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை, சுய உதவிக் குழுவைச் சார்ந்த குடும்பங்களில் உள்ள தொழில் முனைவோர் எண்ணிக்கை பற்றிய தகவல்களை கலந்துரையாடலின் போது உறுதிப்படுத்திட வேண்டும்.

### கலந்துரையாடலின் வெளிப்பாடு

1. சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை
2. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை
3. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை
4. ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை
5. விவசாயம் சார்ந்த அமைப்புகளின் எண்ணிக்கை
6. உழவர் குழுக்களின் எண்ணிக்கை
7. உற்பத்தியாளர் குழுக்களின் எண்ணிக்கை

### 4.6.4.இளைஞர்களுடனான கலந்துரையாடல்

இளைஞர்களின் விருப்பங்கள் மற்றும் ஆர்வத்தை அறிந்து, திறனுக்கேற்ற தேவைகளைக் கண்டறிந்து வாய்ப்புக்களுடன் பொருத்தி, பல்வேறு வேலைகளை உருவாக்கி தந்திட இளைஞர்களை ஒருங்கிணைத்து, கலந்துரையாடலை மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி நடத்த வேண்டும். மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி முன்னதாகவே தேதி மற்றும் நேரத்தை நிர்ணயம் செய்து இளைஞர்களை கிராமத்தில் உள்ள மக்கள் அமைப்புகள் (VPRC / PLF) மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்

வட்டார இயக்க மேலாண்மை அலகின் (BMMU) வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உதவியுடன் திரட்டி தயார்படுத்த வேண்டும்.

**கலந்துரையாடலின் வெளிப்பாடுகள்**

- கிராமத்தில் உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை
- தற்போதைய வேலைகள் சார்ந்த விபரம்
- இளைஞர்களின் முதன்மை வேலை என்ன ?
- வேலைக்காக மாவட்டத்தை விட்டு இளைஞர்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளார்களா ?
- இளைஞர்கள் பயிற்சிகள் ஏதேனும் பெற்றுள்ளார்களா ?
- திறன் பயிற்சி பற்றிய தகவல்களை தெரிந்து வைத்துள்ளனரா ?

# 5. முதலீட்டுத் திட்டங்கள்

## 5.1 கிராம முதலீட்டுத் திட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், தொழில் முனைவோர்கள் மற்றும் கிராம மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு, பங்கேற்பு முறையிலான வளர்ச்சித் திட்ட அணியினர் ஒரு வாரத்தில் மூன்று அல்லது நான்கு கூட்டங்களை கிராம மூலதன திட்டக் கூட்டமாக நடத்தும்.

இந்தக் கூட்டங்களில், பங்கேற்பு முறையிலான வளர்ச்சித் திட்ட அணியினர் மக்களை ஊக்கப்படுத்தி, தொழிலை உருவாக்குதல் மற்றும் அது தொடர்பான மதிப்பு தொடர்ச்சிக்கான வலுப்படுத்தலுக்கான செயல்பாடுகள் மற்றும் கிடைக்கக் கூடிய ஆய்வுகளை பயன்படுத்துதல் போன்றவைகளை விவாதம் செய்திடக் கூடிய வகையில் வழிநடத்திட வேண்டும்.

பெண்கள், மாற்றுத் திறனாளிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாழ் மக்கள், குறிப்பாக மலைவாழ் மக்கள் வாழும் பகுகளில் உள்ள நலிவுற்ற மலைவாழ் மக்களை கூட்டாக உற்பத்தியாளர் குழுவாக உருவாக்கி, தொழில் முனைவுகளை ஏற்படுத்தும் முயற்சிகள் பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டும்.

### கூட்டத்தின் வெளிப்பாடு

- முன்னுரிமை உற்பத்திப் பொருட்கள்
- தொழில் உருவாக்கும் சூழல்கள்
- வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்
- நுண், சிறு, குறுந்தொழில், உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்பு போன்ற தொழில்களை உருவாக்கும் வாய்ப்புக்களைக் கண்டறிதல்

இந்நிலையில், மாவட்டப் பகுப்பாய்வு மற்றும் மதிப்புக் கூட்டுத் தொடர் ஆய்வுகள் எங்கு சமுதாய விருப்பங்களுடன் பொருந்தவில்லையோ, அங்கு அடிப்படைக் காரணங்களைக் கொண்டு, கிராம வளங்கள், திறன்கள், உற்பத்தி செய்யப்படும் பொருள், உற்பத்தி செய்தல் மற்றும் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை ஆகியவற்றிற்கேற்ப கிராம மூலதனம் திட்டம் தயார் செய்யப்படும்.

### கிராம முதலீட்டுத் திட்டம் கீழ்க்கண்டவைகளை உள்ளடக்கி இருக்கும்

- சமூக ரீதியிலான மக்கள் தொகை விபரங்கள்
- சமூக, அறிவியல் ரீதியாக, கிராமத்தின் விவரங்கள்
- கிராமத்தில் உள்ள மக்கள் அமைப்புகள்
- கிராமத்தில் உள்ள இயற்கை வளங்கள்
- சாகுபடி முறைகள்

- விளைவிக்கப்படும் முக்கியப் பயிர்கள்
- கறவை மாடுகள் வளர்ப்பு
- கிராமத்தில் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் எண்ணிக்கை
- கிராமத்தில் உள்ள தொழில்களின் எண்ணிக்கை, அதன் இனம், பிரிவு, குழுவாக செயல்படுத்தப்படும் தொழில்கள்
- பெண்கள் தலைமையேற்று நடத்தும் தொழில்கள் மற்றும் சமூக தொழில்கள்
- மேம்பாட்டுக்கு வாய்ப்புள்ள தற்போதைய தொழில்கள்
- வாய்ப்புள்ள தொழில்கள்
- கைவினைக் கலைஞர்கள் பட்டியல்
- கைவினைத் தொழில்கள்
- இதர தொழில்கள்

கிராம முதலீட்டுத் திட்டமானது, தகவல், தொடர்பு, தொழில்நுட்பம் (ICT) என்னும் மேம்படுத்தப்பட்ட தளத்தில் செய்யப்பட வேண்டும்.

### கிராம முதலீட்டுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. திட்டத்தை செயல்படுத்துவதற்கான முக்கியப் பகுதிகளைக் கண்டறிதல்
2. மாற்றுத் திறனாளிகள், மகளிரின் தொழில் தேவைகள் மற்றும் தொழில் முனைதலில் அவர்களிடையே காணப்படும் இடைவெளிகளைக் கண்டறிந்து அதற்கேற்ற முதலீடுகளுடன் கூடிய திட்டங்கள் வழங்குதல்.

   அ) தொழில் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் ஆ) ஒன்றிணைப்பு (மதிப்பு மற்றும் ஒன்றிணைப்பு செய்வதற்கான ஆதாரங்கள்)

   இ) கூட்டமைப்புக்கான வாய்ப்புகள் (எந்தெந்த வகையில் மற்றும் அதற்கான நிறுவனங்கள்)
3. துவக்கப்பட வேண்டிய தொழில்கள் / நிறுவனங்கள்
4. சுற்றுச்சூழலுக்கு ஏதேனும் பாதகம் விளைவிக்குமா ?

   (சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கங்கள்)
5. மகளிரைத் தலைமையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டிய தொழில் நிறுவனங்கள்
6. மேம்படுத்தப்பட வேண்டிய தொழில்கள் / நிறுவனங்கள்
7. பொருட்களை உற்பத்தி செய்யும், தொழில் நிறுவனங்கள் வைத்திருக்கும், தொழில் திறனுள்ள தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள்

8. தொழில் மதிப்புக்கூட்டு தொடரில் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை
9. உருவாக்கப்பட வேண்டிய உற்பத்தியாளர் குழு, தொழில் குழு மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்பு
10. திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகள்
11. கிராம முதலீட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுவதற்கு கிராம ஊராட்சியுடன் இணைந்து கிராமக் கூட்டத்தில் ஒப்புதல்
12. கிராமக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்ட கிராம முதலீட்டுத் திட்டத்தை கிராம சபையில் தகவலுக்காக சமர்ப்பித்தல்.

## 5.2 வட்டார முதலீட்டுத் திட்டம்

வட்டார திட்ட செயலாக்க அலகு (BPMU), கிராம முதலீட்டுத் திட்டங்களை சேகரித்து அதனை வட்டார முதலீட்டுத் திட்டமாகத் தொகுக்க வேண்டும். வட்டார முதலீட்டுத் திட்டத்தின் ஆய்வு, வட்டார அளவில், ஊராட்சி அளவில் கண்டறியப்பட்ட பொருட்களின் முன்னுரிமை அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும்.

வட்டார முதலீட்டுத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்டவற்றைக் கண்டறிய இயலும்

- தொழில் முனைவு நடவடிக்கைகள்
- ஒரு பொருளின் உற்பத்தி முதல் விற்பனை வரை வழிகாட்டுதல் (Intervention)
- பொருத்தமான பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்தல்
- தனி நபர் தொழில் / உற்பத்தியாளர் குழு / தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்பு போன்றவைகளைத் தெரிந்து கொள்ளுதல்
- பெண்கள் தலைமையேற்று நடத்தும் தொழில்களை அறிதல்
- பசுமை (வேளாண்) தொழில்களை அறிதல்
- முதலீடு செய்வதற்கான சூழலை அறிதல்
- திட்ட நிதி
- கூட்டாகச் செய்யக் கூடிய வாய்ப்புகள் (தொழில் திட்டத்தின் மூலம் உதவிட வாய்ப்புள்ள பகுதிகள்)

## 5.3 மாவட்ட முதலீட்டுத் திட்டம்

மாவட்ட அலகு, வட்டார முதலீடு திட்டங்களைத் தொகுத்து மாவட்ட முதலீட்டுத் திட்டத்தை தயார் செய்யும். மாவட்ட முதலீட்டுத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்டவற்றைக் கண்டறிய இயலும்.

- தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் மற்றும் ஆலோசனைகள்
- துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுதல்
- நிதிகளுக்கான தொடர்புகள்
- துறை தொடர்பான திட்டங்கள்
- சேவைகள்
- உள்கட்டமைப்புகள்

மாவட்ட முதலீட்டுத் திட்டம், பொது மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து முழுமையாக பயன்படக் கூடிய அதிமான முதலீடுகளைக் கொண்டு, மதிப்புக் கூட்டும் மற்றும் மதிப்பு தொடர்ச்சியான செயல்பாடுகளை நிறைவேற்ற உதவும். இந்த மாவட்ட முதலீட்டுத் திட்டமானது, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் அனைத்துத் துறை அலுவலர்கள் கூட்டத்தில் வைத்து, மதிப்பீடு செய்யப்பட்டு, பின்னர் ஒப்புதல் பெறப்பட வேண்டும். (மாவட்ட ஆட்சித் தலைவர் – மாவட்டதமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட சங்கத்தின் தலைவர்).

மாவட்ட முதலீட்டுத் திட்டம், வட்டார அலுவலகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் வழிகாட்டும்.

## 5.4 மாநில முதலீட்டுத் திட்டம்

மாநில அலகு, மாவட்ட திட்ட முதலீட்டுத் திட்டங்களைத் தொகுத்து, மாநில முதலீட்டுத் திட்டத்தை தயார் செய்யும். மாநில அலகு, மாவட்ட முதலீட்டுத் திட்டங்களை தொகுப்பதோடு மட்டுமல்லாமல், துறைகளின் ஒருங்கிணைப்பு மூலம், உயர்நிலையில் தொழிலுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்குவதற்கும், கொள்கை திட்ட யுக்திக்கும் வழிகாட்டியாக செயல்படும்.

மாநில முதலீடு திட்டம், திட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்தவும் மற்றும் மாநில அளவில் செயல்படும் தனியார் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து செயல்படவும் உதவும்.

## 6. தகவல் தொடர்பு தொழில் நுட்பம்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக் குழுவினர் தாங்கள் பெறும் தகவல்களை கைபேசி செயலி மூலம் (Mobile application) பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இப்பதிவேற்றம் செய்வதற்கு சமூக வல்லுனர், சமுதாய வளப் பயிற்றுநர் (மிஷன் அந்தியோதயா) பொறுப்பாவர்.

கைபேசி செயலி போன்ற தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் மூலம் இக்கூறின் முழுமையான வெளிப்படையான அறிக்கைகள் மற்றும் புள்ளி விபரங்கள் கிராம, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் அறிவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.



## 7. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினரின் பொறுப்புகள்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினர், தொழில்களை உருவாக்குவதற்கு திறந்த மனதோடு, சமுதாயத்தின் நிலை, சமுதாய மக்களின் மதிப்பு மிக்க ஆலோசனைகள், கேள்விகள் இவைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினர் மாவட்ட பகுப்பாய்வின் மூலம், மாவட்டத்தின் ஒவ்வொரு விபரங்களையும் அறிந்திருக்க வேண்டும். இத்தகவல்களை வட்டார திட்ட செயலாக்க அலகினர் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

திட்ட செயல்பாடுகளான கிராம நடைப்பயணம் மற்றும் கலந்துரையாடல்களின் போது, மக்களின் பதில்கள், இயல்புகள் அவர்களின் தேவைகள், அவர்களின் செயல்பாடுகள் ஆகியவை ஆவணப்படுத்தப்பட வேண்டும். இவற்றின் மூலம் கிடைக்கக் கூடிய தகவல்களை இரண்டாம் நிலைத் தகவல்களோடு ஒப்பிட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயார் செய்யும் திட்ட அணி, கூர்ந்து கவனித்தல் மற்றும் தூண்டுதல்களுக்கான கேள்வி கேட்டல் மூலம் உடனடியாக திட்டத்தின் நோக்கங்களை கொண்டு வருவதற்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

அணியினரை தயார்படுத்திட, அடிக்கடி கேட்கும் கேள்வித்தாள் உடனடி மதிப்பீட்டு பட்டியலாக இருக்க வேண்டும்.

## 8. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினருக்கான பயிற்சி

- மாவட்ட திட்ட செயலாக்க அலகின் மூலம் கண்டறியப்பட்ட சமூக வல்லுநர்களுக்கான, 3 நாள் முதன்மைப் பயிற்றுநர் பயிற்சிகள், மாநில திட்ட மேலாண்மை அலகின் மூலமாக நடத்தப்படும்.

- முதன்மை பயிற்றுநர்களுடன் மாவட்ட திட்டப் பணியாளர்கள், செயல் அலுவலர்கள், வட்டார திட்ட அணித் தலைவர்கள், திட்ட செயல்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து வட்டார அளவில் கண்டறியப்பட்ட மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினருக்கு மூன்று நாள் பயிற்சியினை நடத்துவார்கள்.

- பயிற்சி முடிந்த பிறகு, பங்கேற்பு முறையிலான வளர்ச்சித் திட்ட அணியினர் பங்கேற்பு முறையிலான வளர்ச்சித் திட்டம் தயாரித்து, அக்கிராமத்தினுடைய கிராம முதலீட்டுத் திட்டத்தையும் தயாரித்து முடிப்பர்.

## 9 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

அனைத்துத் திட்ட கிராமங்களிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரித்தலுக்கு வழிகாட்டி அமைப்பாக செயல்படும். மாவட்ட திட்ட மேலாண்மை அலகானது கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.

### கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பொறுப்புகள்

- மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்பு அணியினரை அடையாளம் காண திட்ட அணிகளுக்கு உதவி செய்தல்
- ஊராட்சி அளவில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தொடர்பான பயிற்சிகளில் கலந்து கொள்ள வழிகாட்டியாக இருத்தல்
- கிராம அளவில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தலுக்கு திட்ட அணியினருடன் இணைந்து திட்டமிடல்
- சமூக வல்லுநர்களைக் கண்டறிதல், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தலுக்கு ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
- மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தொடர்பாக நடைபெறும் அனைத்துக் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளையும் ஆவணப்படுத்த வேண்டும். (உ.ம்– வருகைப் பதிவேடு, புகைப்படம் மற்றும் கூட்ட நடவடிக்கைகள்)

# 10. இணைப்புகள்

## 10.1 மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1. திட்டம் பற்றியும், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்படுதல் பற்றியும் கிராம ஊராட்சிக்கு தகவல் தெரிவித்தல்.

2. சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சமுதாய வல்லுனர்களை வட்டார திட்ட செயலாக்க அலகின் வழிகாட்டுதலுடன் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் குழுவை அமைத்தல்.

3. நிர்ணயிக்கப்பட்ட பாடத் திட்டங்களில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட குழுவிற்கு பயிற்சி அளித்தல்.

4. ஊராட்சியில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளான சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்தத் தொழில் குழு போன்றவற்றிற்கும், அதன் உறுப்பினர்களுக்கும் தகவல் அளித்தல்.

5. ஏற்கனவே உள்ள தொழில் நிறுவனங்கள், அமைப்புகள், உழவர் சங்கங்கள், உழவர் குழுக்கள் மற்றும் பிற தொழில் பங்கேற்பை உறுதிப்படுத்தும் வகையில் தகவல் தெரிவித்தல்.

6. கிராம நிர்வாக அலுவலர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், பால் சங்கங்களுக்கு தகவல் தெரிவித்தல்.

7. கிராமத்தைப் பற்றிய இரண்டாம் நிலைத் தகவல்களை சேகரித்தல்

8. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் தயாரிக்கப்பட்ட பங்கேற்பு முறையில் கண்டறிந்த ஏழை மக்கள் (இலக்கு மக்கள்) பட்டியலை தயார் நிலையில் வைத்திருத்தல்.

9. மாவட்ட பகுப்பாய்வு கலந்தாலோசனைக் கூட்ட ஆய்வறிக்கையை குறிப்பெடுத்து பயன்படுத்துதல்.

10. ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்தத் தொழில் குழு, தொழில் நிறுவனத்தினர், உழவர் குழுக்கள் / கிராம ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் திட்ட பங்காளர்களுடன் குழு விவாதத்தை நடத்துதல்.

11. மாவட்ட பகுப்பாய்வு மற்றும் மதிப்புக் கூட்டுத் தொடர் ஆய்வு அறிக்கைகளைப் பற்றி கிராம மக்களுடன் சரிபார்த்து ஆய்வு செய்தல்.

12. மாவட்டத்திலுள்ள தொழில்கள், உற்பத்தியாளர்கள், முக்கியப் பொருள்கள், தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழிலுக்கான சூழ்நிலை சாத்தியங்கள், தொழிலில் உள்ள இடைவெளிகள் பற்றி கண்டறிந்து பட்டியலிடுதல்.

13. கூட்டங்களின் போது நடைபெறும் நிகழ்வுகளை மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்புப் குழுவானது தங்களுடைய கருத்துகள், பார்வைகளை வலியுறுத்தாமல் மக்களின் கருத்துகளை மட்டும் பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டும்.

14. கூட்டத்தில் கலந்த கொண்ட அனைத்து உறுப்பினர்களும் கருத்துக்களைக் கூறும் வகையில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்புக் குழு வழி நடத்தி அவர்கள் அனைவரின் கருத்துக்களையும் பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டும்.

15. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தலை வட்டார திட்ட செயலாக்க அலகு வழி நடத்த வேண்டும்.

16. மாவட்ட செயல் அலுவலர் (DEO) தர ஆய்வு செய்ய வேண்டும்.

17. மாவட்ட செயல் அலுவலர் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் நிகழ்வுகளை அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும்.

## 10.2 கிராம தொழில் முனைதல் ஆய்வுக்கான தகவல்களை சேகரிப்பதற்கான அடிப்படை காரணிகள்

1. உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை – உற்பத்திப் பொருள் – உற்பத்தி அளவு

அ) உற்பத்தியாளர்கள் : உற்பத்தி பொருள் வாரியாகவும், தொழில் வாரியாகவும் மகளிர் உற்பத்தியாளர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன உற்பத்தியாளர்கள் / பால் உற்பத்தியாளர்கள்)

ஆ) உற்பத்திப் பொருள்: பல வகையான பயிர்கள் (எ.கா. கேழ்வரகு, பருப்பு வகைகள்)

2. மதிப்புக் கூட்டு வகையில் கண்டறியப்பட்ட பொருள்களின் உற்பத்தியில் ஈடுபடும் நபர்களின் அளவு / தரம் ஆய்வு, மகளிர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்ற பிரிவினரின் பங்கேற்பு அவசியம்.

3. தொழில் நிறுவனங்கள் / வருமானப் பெருக்கத்திற்கான வாய்ப்புகள்:

அ) தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் (எ.கா.) வளங்களைத் திரட்டி தொழில் செய்வோர் / போக்குவரத்து செய்வோர் / கொள்முதல் செய்வோர் போன்றோர்.

ஆ) மகளிரின் பங்கேற்பு, மகளிர் தலைமையிலான தொழில் நிறுவனங்கள்

4. தொழில்களில் உள்ள சவால்கள்

5. வளங்கள் கிடைக்கும் தன்மை / நிலைத்தத்தன்மை / சந்தை வாய்ப்புகள்

அ) வளங்கள் – நீர்ப்பாசன வசதிகள், இருப்பு கிடங்குகள், மகளிர் மற்றும் சமூக குழுக்களால் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு உரிமை உள்ள பால் சங்கங்கள்



## 9.3 உற்பத்தியாளர்களுக்கான கேள்விகள்

1. கிராம ஊராட்சியின் பெயர் மற்றும் உற்பத்தியாளர் விபரம் ?
    - ✓ விவசாயம்
    - ✓ காய்கறிகள்
    - ✓ துணைத் தொழில்கள்
    - ✓ பால் சார்ந்த தொழில்கள்
2. கிராம ஊராட்சியில் உள்ள உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?
3. பெண் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை ?
4. தாழ்த்தப்பட்ட குடும்பங்களிலிருந்து எத்தனை உற்பத்தியாளர்கள் உள்ளனர் ?
5. மலைவாழ் மக்களின் அல்லது பழங்குடியினர் குடும்பங்களிலிருந்து எத்தனை உற்பத்தியாளர்கள் உள்ளனர் ?
6. கிராம ஊராட்சியில் எத்தனை பெரிய உற்பத்தியாளர்கள் உள்ளனர் ?
7. சராசரி உற்பத்தியின் அளவு.................................
8. மொத்த உற்பத்தியின் அளவு ....................................
9. என்னென்ன பயிர்கள் பயிரிடப்படுகின்றன ? ‘
10. உற்பத்தி அமைப்புகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பெண்களின் பங்களிப்பு எப்படி உள்ளது ?
11. உற்பத்தியின் அடிப்படையில் என்ன மாதிரியான தொழில்களுக்கு வாய்ப்புகள் உள்ளது ?
12. உற்பத்தியாளர்களிடமிருந்து எந்த வகையான தொழில்கள் உருவாகின்றது ?
13. பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகள் என்ன ?
14. கிராமத்தில் அனைத்து உற்பத்திப் பொருட்களையும் திரட்டி தொழில் செய்பவர் உள்ளனரா ?
15. சந்தை வாய்ப்புகள் என்ன ?
16. உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருட்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள சந்தைப்படுத்துதலுக்கான வாய்ப்புகள் என்ன ?
17. உற்பத்தியாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் என்ன ?
18. கிராம ஊராட்சியில் சேமிப்புக் கிடங்கு உள்ளனவா ?
19. சேமிப்பு வசதிகள் கிடைக்கப் பெறுகிறார்களா ?

20. உற்பத்தியாளர்கள் குழு கூட்டமைப்பு சங்கங்கள் உள்ளனவா ? இருப்பின், அவைகளின் விவரம் மற்றும் முகவரி

21. ஒத்த தொழில் குழு உள்ளனவா ? இருப்பின் அதன் விபரங்கள்

22. உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்யும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அவைகளின் விபரங்கள்

23. உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்யும் அரசு நிறுவனங்கள் எவை ?

24. உற்பத்தியாளர்கள் அரசு திட்டங்களை கிடைக்கப் பெறுபவர்களாக இருக்கிறார்களா ?

25. உற்பத்தியாளர்கள் எந்த மாதிரியான தளவாட / போக்குவரத்து உதவிகளைப் பெறுகிறார்கள் ?

26. உற்பத்தியாளர்களுக்குத் தேவையான 5 முக்கியமான உதவிகள் என்ன ?



## 10.4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கான கேள்வித்தாள்

1. கிராமத்தின் பெயர் .......................................................
2. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பெயர் .......................................................
3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்பட்ட தேதி .......................................................
4. கிராமத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை.......................................................
5. கிராமத்தில் உள்ள எத்தனை குடும்பங்கள் சுய உதவிக் குழுக்களில் இணைந்துள்ளனர் ?
6. எத்தனை சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது ?
7. எத்தனை சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா நிறுவனங்களுக்கு (NGO) உட்பட்டு உள்ளன ?
8. எத்தனை சுய உதவிக் குழுக்கள், தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக உள்ளன ?
9. கிராமத்தில் உள்ள பழங்குடியினர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
10. கிராமத்தில் உள்ள சிறப்பு சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
11. எத்தனை பேர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர் ?
12. 5 வருடங்களுக்கு மேலாக செயல்படுகின்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
13. 2 வருடங்களுக்கு மேலாக செயல்படுகின்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
14. வங்கிக் கடன் இணைப்பைப் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
15. நன்றாக செயல்படுகின்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
16. செயல்படாமல் உள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
17. கடன் திரும்ப செலுத்தலின் நிலை என்ன ?
18. பொருளாதார நடவடிக்கைகளுக்கு கடன் கிடைக்கப் பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை ?
19. சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களின் முதன்மைத் தொழில் என்ன ?
20. வாழ்வாதாரச் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள குழுக்களின் எண்ணிக்கை ?
21. பிற துறை திட்டங்களிலிருந்து எத்தனை சுய உதவிக் குழுக்கள் கடன் கிடைக்கப் பெற்றுள்ளன ?
22. கிராமத்தில் நுண் நிதி கடன் நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளனவா ?

## 10.5 கிராம நடை பயணம் மேற்கொள்வதற்கான மாதிரி கேள்வித்தாள்

கிராம நடை பயணத்தின் போது, கேள்விகள் அனைத்தும் வாழ்வாதாரத் தொடர்புடைய தொழில்களை உருவாக்கும் வகையில் மையப்படுத்தி இருக்க வேண்டும்.

1) கிராமம் பார்ப்பதற்கு எப்படி உள்ளது ?
2) வாழ்வாதார வளங்கள் யாவை ?
3) என்னென்ன தொழில்கள் செய்யப்படுகின்றது ?
4) கிராமத்தில் நடைபெறும் முதன்மைத் தொழில்கள் யாவை ?
5) கிராமத்தின் இயற்கை சூழலுக்கு எவ்வகையான சிறப்பம்சங்கள் பங்களிக்கின்றன ?
6) உள் இடப்பெயர்ச்சி இருக்கிறதா ?
7) வெளி இடப் பெயர்ச்சி இருக்கிறதா ?
8) பாசன முறை எப்படி இருக்கிறது ?
9) கிராமத்தில் விளையும் முக்கிய பயிர்கள் யாவை ?
10) கிராமத்தில் உள்ள துணை தொழில்கள் என்ன ?
11) கிராமத்தில் உள்ள உற்பத்தி மற்றும் சேவைத் தொழில்கள் என்ன ?
12) உற்பத்தி முறையில் பெண்களின் பங்கு என்ன ?
13) பெண்கள் மற்றும் ஆண்களுக்கான வேலை வாய்ப்புக்கான முக்கியமான வழிகள் என்ன ?
14) கிராமத்தில் குறிப்பிட்ட தொழில்கள் வளமாக அல்லது செழிப்பாக அல்லது விருத்தியடைய காரணங்கள் என்ன ?
15) தொழில் ரீதியான இணைப்புகள் கிராமத்தில் எப்படி உள்ளது ?
16) பெரிய தொழில் முனைவோர்கள் எத்தனை பேர் கிராமத்தில் உள்ளனர் ?
17) பெரிய உற்பத்தியாளர்கள் கிராமத்தில் எந்த நிலையில் இருக்கிறார்கள் ?

## 10.6 திட்ட வழிமுறைகள்

| கட்டம் | செயல் | பொறுப்பு | கால அளவு | வழி / மூலம் | முறைகள் | ஆவணப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| **1.** | கிராமத்தின் இரண்டாம் கட்ட தகவல் சேகரிப்பு<br>1. கிராம வரைபடம்<br>2. நில விபரங்கள்<br>3. வளங்கள்<br>4. சமூக ரீதியிலான மக்கள் தொகை விபரங்கள்<br>➢ குடும்பத்தில் உள்ள மக்கள்<br>➢ குடியிருப்பு<br>5. சமூகக் குறிப்பு<br>6. மக்கள் அமைப்புகள் / சுய உதவிக் குழு நிறுவன ரீதியான தகவல் தொடர்புகள்<br>7. விவசாயம், தோட்டக்கலை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை | திட்ட செயலர்களுடன் இணைந்து மக்கள் பங்கேற்பு முறையியான வளர்ச்சித் திட்ட அணி<br>மக்கள் அமைப்புகள் / சுய உதவிக் குழு பற்றிய இரண்டாம் தகவல்களை மாவட்ட அணி சேகரித்தல்<br>வட்டார அணி வட்டாரத்தி லிருந்து விவசாயம், தோட்டக் கலை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய தகவல்களை சேகரித்தல் | ஒரு நாள் | 1. கிராம நிர்வாக அலுவலர்<br>2. கிராம ஊராட்சி செயலர்<br>3. மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (TNSRLM)<br>4. வட்டார வளர்ச்சி அலுவலகம்<br>5. வட்டார அளவில் உள்ள விவசாயத் துறை, தோட்டக் கலைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள் | நேரடி / தனித் தனியாக சந்திப்புக் கூட்டம் | தகவல் தொழில் நுட்பம் மூலம் |
| **2** | கிராம நடை பயணம்<br>1. இயற்கை வளங்களைக் கூர்ந்து கவனித்தல்<br>2. தொழில்கள் / தொழில் கூடங்கள், பண்ணைகள், கோழிப்பண்ணை, | வட்டார அணியினருடன் சென்று, மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட | சிறிய ஊராட்சி கள் ஒரு நாள்<br>நடுத்தர ஊராட்சி கள் இரண்டு நாட் கள் | கிராமத்தில் உள்ளவர்களின் மூலமாக | **1.**கூர்ந்து கவனித்தல்<br>**2.**சமுதாய மக்களிடையே அறிவு பூர்வமாக தகவல்களைப் | எழுத்துப் பூர்வமாக பின்பு, தகவல் தொழில் நுட்பம் வழியாக |

| கட்டம் | செயல் | பொறுப்பு | கால அளவு | வழி / மூலம் | முறைகள் | ஆவணப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| | கால்நடை பராமரிப்புத் துறை பார்வையிடல்<br>3. அடிப்படை கட்டமைப்பு கிட்டங்கிகள், பால் சங்கங்கள், சேமிப்பு கிடங்குகள், கால்நடை பராமரிப்பு மையங்கள்<br>கிராமத்தில் தொழில் வளர்வதற்கான இணைப்புகள், மின்சாரம் இவைகளைப் பார்வையிட்டு உறுதிபடுத்துதல் | அணி பார்வையிடல் | பெரிய ஊராட்சிகளில், 15 குடியிருப்புகளுக்கு மேல் மூன்று நாட் கள் | | பரிமாறுதல்<br>தொழில் முனை வோர்கள் மற்றும் உற்பத்தி யாளர் களின் அனுபவ பகிர்வு / கிராம நடை பயணத் தின் போது அடிக்கடி கேட்டக் கேள்வி, செய்யக் கூடியவை, கூடாதவை | |
| **3** | நிறுவன அமைப்புகளின் தகவல்களை உறுதிப்படுத்துதல் | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி உறுப்பினர்கள், கிராம வறுமைக் ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சமூக வல்லுநர்கள் | 2 நாட்கள் | கிடைக்கப் பெற்ற இரண்டாம் தகவல்களை, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புடன் கலந்துரையாடல் மூலம் உறுதிப்படுத்துதல் | இரண்டாம் நிலை தகவல்<br>கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைப்பு களின் ஆவணங் கள் | தகவல் தொழில் நுட்பம் மூலம் ஆவணப்படுத்துதல் |
| **4** | கிராமத்திலுள்ள தகவலின் அடிப்படையில் இரண்டாம் தகவலை உறுதிப்படுத்துதல் | சமூக வல்லுநர்கள் மற்றும் திட்ட செயலர்கள் (Project Excecutives) | ஒரு நாள் | கிராம நடை பயணர்த்தின் போது கலந்து கொண்ட சமுதாய மக்கள் பிரதிநிதியை கொண்டு இரண்டாம் தகவலை உறுதிப்படுத்துதல் | | தகவல் தொழில் நுட்பம் மூலம் ஆவணப்படுத்துதல் |

| கட்டம் | செயல் | பொறுப்பு | கால அளவு | வழி / மூலம் | முறைகள் | ஆவணப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| **5** | மாவட்ட பகுப்பாய்வினை சரிபார்த்தல் மற்றும் தரவரிசைப்படுத்துதல் | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி மற்றும் வட்டார அணி செயலர்கள் | அரை நாள் | மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையினை சமுதாய மக்கள், உற்பத்தியாளர் கள் மற்றும் தொழில் முனை வோரைக் கொண்டு உறுதி படுத்துதல் | | |
| **6** | பொருட்கள் / துணைப் பிரிவுகள் / தனியாக உள்ள தொழில்களின் தர வரிசைப்படுத்துதல் | மக்கள் பங் கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி | ஒரு நாள் | மக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள், தொழில் முனைவோர்கள் உற்பத்தியாளர்கள் | | |
| **7** | உற்பத்தியாளர் குழுக்களுடன் கலந்துரையாடல் குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடும் அனைத்து பங்காளர்களையும் உள்ளடக்கிய விவாதம்<br>1. கிராமத்தின் முதன்மை உற்பத்தியாளர்<br>2. விளைபொருட்களை மொத்தமாக சேகரிப்பவர்<br>3. இடுபொருள் விநியோகம் செய்பவர்<br>இருப்பு வைத்து விற்பனை செய்பவர்கள் | வட்டார திட்ட செயலாக்க அலகின் உதவியுடன் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக் குழு | ஒரு நாள் | 1. மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை<br>2. ஏற்கனவே கண்டறியப்பட்ட கூட்டுத் தொடர் படிப்பினைகள்<br>குறிப்பிட்ட தொழிலின் இரண்டாம் நிலைத் தகவல்கள் | கலந்துரை யாடல்<br>1. உற்று நோக்குதல்<br>2. கேள்வி கேட்டல்<br>3. ஆவணப்படுத்துதல் கேள்வித்தாள் | |
| **8** | 1. கிராம தொழில்கள் கணக்கெடுப்பு<br>2. ஏற்கனவே உள்ள தொழில்களை | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி மற்றும் | ஒரு நாள் | மாவட்ட பகுப்பாய்வு களுடன் மதிப்பிடுதல் / மதிப்புக் கூட்டுத் தொடர் படிப்பினைகள், தொழில் | இரண்டாம் நிலைத் தகவல்கள் | |

| கட்டம் | செயல் | பொறுப்பு | கால அளவு | வழி / மூலம் | முறைகள் | ஆவணப்படுத்தல் |
|---|---|---|---|---|---|---|
| | பட்டியலிடுதல் தொழில் முனைவோர்கள் | வட்டார திட்ட செயலாக்க அலகு | | நிறுவனங்களுடன் இணைத்தல் | | |
| **9** | தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடல் | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி மற்றும் வட்டார திட்ட செயலாக்க அலகு | ஒன்று அல்லது இரண்டு நாள் | | இரண்டாம் நிலைத் தகவல், பயிற்சி உபகரணம் / கையேடு, கேள்வித் தாள் | ஆவணப் படுத்துதல் / பதிவு செய்தல் |
| **9** | தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடல் | மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணி மற்றும் வட்டார திட்ட செயலாக்க அலகு | ஒன்று அல்லது இரண்டு நாள் | | இரண்டாம் நிலைத் தகவல், பயிற்சி உபகரணம் / கையேடு, கேள்வித் தாள் | ஆவணப் படுத்துதல் / பதிவு செய்தல் |

## 10.7 மாதிரி கிராம முதலீட்டுத் திட்டம்

### (அ) கிராமத் தகவல்கள் (அவசியமானவை)

| மாவட்டம் | கிருஷ்ணகிரி | கிராம ஊராட்சி | காட்டகரம் |
|---|---|---|---|
| வட்டாரம் | பர்கூர் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | 23 |
| குக்கிராமங்களின் பெயர்கள் | 1) கங்காவரம், 2) சாந்தூர் அய்யர் கோட்டை, 3) அண்ணாநகர், 4) சோலைவனம்,<br>5) பந்தார்தான் கோட்டை, 6) கங்காவரம் மேல் கோட்டை, 7) குட்டப்பட்டி,<br>8) குட்டக் கொல்லிக் கோட்டை, 9) மாகிரெட்டி பட்டிக்கோட்டை, 10) குருமார் கோட்டை,<br>11) பத்தான்கோட்டை, 12) பாறைக்கோட்டை, 13) பட்டக்காபட்டி கோட்டை, 14) பட்டக்காப்பட்டி,<br>15) பித்தக்காரன் கோட்டை, 16) ராம்நகர், 17) சாந்தூர், 18) சாந்தூர் கூட்டு ரோடு,<br>19) செம்மலை செவத்தான் கோட்டை, 20) சாவுல் கோட்டை (சவுல்), 21) வேடர் தட்டக்கல், 22) வெள்ளைப் பாறையூர், 23) காட்டேகரம் (காட்டு அகரம்) | | | |

### (ஆ) மாவட்ட சுருக்கம் : (தொகுப்பு)

மாவட்ட பகுப்பாய்வின் முக்கிய அம்சங்கள்

2016 செப்டம்பரில் கிருஷ்ணகிரி மாவட்ட பகுப்பாய்வு நடைபெற்றது. இப்பகுப்பாய்வு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 95% குறு விவசாயிகள் என்பதை வெளிப்படுத்தியது.

**முக்கிய பாசன நீராதாரங்கள் :**

குழாய் கிணறுகள் – 66%, குளம் / ஏரி – 16%, கிணறுகள் – 16% மற்றும் கால்வாய்ப் பாசனம் – 2%

**மாவட்டத்தின் முக்கிய நீர்ப்பாசன விளைப் பொருட்கள் :**

நெல், கேழ்வரகு, சோளம், மஞ்சள், கரும்பு, வாழை, தக்காளி, நிலக்கடலை, பருத்தி, தென்னை மற்றும் மலர் சாகுபடி

**மாவட்டத்தில் விளையும் முக்கிய பயிர்கள் :**

நெல், கேழ்வரகு, சோளம், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, மாம்பழம், தென்னை, முட்டைக்கோஸ், வாழை, தக்காளி போன்றவை.

## மாவட்டத்தில் விளையும் முக்கிய பணப்பயிர்கள் :

நிலக்கடலை, மலர்கள், பருத்தி

## பயிரிடப்படும் பயிர்களின் பரப்பளவும் உற்பத்தி வீதமும்

| வ.எண். | பயிர் | பயிரிடப்படும் பரப்பு | உற்பத்தி வீதம் (பங்கு) |
|---|---|---|---|
| 1 | கேழ்வரகு | 47% | 42% |
| 2 | தக்காளி | 38% | 46.8% |
| 3 | கொள்ளு | 34% | 31.2% |
| 4 | மா | 25.7% | 17% |

கிருஷ்ணகிரி மாவட்டமானது கேழ்வரகு உற்பத்தியில் மாநிலத்தில் முதலிடத்திலும், கொள்ளு, பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் தருமபுரி மாவட்டத்திற்கு அடுத்து இரண்டாம் இடத்திலும், உருளைக் கிழங்கு உற்பத்தியில் முதலிடத்திலும், மாம்பழ உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும் உள்ளது. இருப்பினும், இன்னும் அதிக அளவில் கேழ்வரகு, கொள்ளு, மாம்பழ உற்பத்திக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 'மாம்பழ உற்பத்தித் திறன்' குறைந்த அளவிலேயே காணப்பட்டது. தேசிய தோட்டக்கலைத்துறை மூலம் அதிகரிக்கவும், பொருத்தமான மற்றும் ஒருங்கிணைந்த சரியான நுட்பங்களை வழங்கவும், கவாத்து மற்றும் ஒட்டுப் பயிர்கள் நுட்பங்களை வழங்கவும், இருப்பு வைத்து பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மலர் சாகுபடி என்பது மாவட்டத்தில் காணப்படும் மற்றுமொரு விவசாயமாகும். மாவட்டத்தில் விளையும் முக்கிய கொய் மலர்கள் (Cut Flowers) ரோஜா, மெதுமலர், இளஞ்சிவப்பு மற்றும் மல்லிகை, சாமந்தி, சம்பங்கி போன்ற கட்டு மலர்கள், மாவட்டத்தின் சில பகுதிகளில் சம்பங்கி, குவளை (கிளாடியோலஸ்) போன்ற மலர்கள் பயிரிடப்படுகின்றன. பர்கூர் வட்டாரத்தில் கொய் மலர்களுக்காகவே ஒரு பகுதி அளவிலான அமைப்பு (Cluster) செயல்படுகிறது.

மாவட்டத்தில் **8500** சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) பதிவு செய்யப்பட்டுள்ளன.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முக்கிய தொழில்கள் / தொழிற்சாலைகள்

1) மாம்பழ கூழ் தயாரித்தல் (பருவ காலங்களில் கொய்யா போன்ற பழங்களும் பயன்படுத்தப்படுகின்றன).
2) கிரானைட் கற்கள் மெருகூட்டும் தொழிற்சாலைகள்
3) ஆடை உற்பத்தித் தொழில்
4) அச்சிடுதல் தொழில் பகுதி அமைப்பு (Cluster)

'சிப்காட்' நிறுவனம் மாவட்டத்தில் 4 முக்கிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியுள்ளது. மேலும், வேளாண் பொருளாதார மண்டலம் ஒன்றையும் (AEZ) கிருஷ்ணகிரியில் உருவாக்கியுள்ளது. மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியாளர் சந்தைக் குழு (APMC) சந்தைகளும், பல மொத்த, சில்லறை விற்பனை சந்தைகளும் உள்ளன. குளிர்பதனக் கிடங்குகள் 4 உள்ளன. இவற்றில் 3 தனியார் வசம் உள்ளன. இவற்றில் பெரும்பாலும் 'புளி'யே பாதுகாத்து வைக்கப்படுகிறது. மாவட்டத்தில் 50% நிலமானது காடுகளால் சூழப்பட்டுள்ளது. 100% குக்கிராமங்களும் கிராம மின் மயமாக்கல் திட்டத்தில் மின் இணைப்பு வசதி பெற்றுள்ளன.

### (இ) கிராம சூழல் (முக்கிய கூர்நோக்குகள்)

**சமூகம் :** ஒடுக்கப்பட்ட, நலிவுற்ற, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் வாழ்வாதார பிரச்சினைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இவர்கள் எந்த முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருள் உற்பத்தியில் / தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை இந்த கிராம சூழல் நோக்கில் கண்டறிய வேண்டும். அதில் அவர்கள் ஈடுபடவில்லை எனில் அவர்கள் என்ன தொழிலில் ஈடுபடுகிறார்கள் என அறிய வேண்டும். அவர்கள் சுய உதவிக் குழுக்களில் இணைந்துள்ளார்களா ? இல்லையா என அறிய வேண்டும்.

இந்தக் கிராமத்தில் உள்ள 2455 குடும்பங்களில் 108 குடும்பங்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர்கள் ஆவர். 108 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த குடும்பங்களில் 10 குடும்பங்கள் சராசரியாக 1/2 ஏக்கர் முதல் 1 ஏக்கர் வரை நிலமுள்ள பரப்பில் மாம்பழம் பயிரிடக்கூடிய குடும்பங்கள் ஆகும். மற்ற குடும்பங்கள் கூட்டு மதிப்புக் கூட்டுத் தொடர்

மாம்பழச் செடி நாற்றங்கால் வளர்ப்பில் ஈடுபடுகின்றனர்.

மொத்தக் குடும்பங்களில் 25 பால் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 108 குடும்பங்களில் 5 குடும்பங்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் சுய உதவிக் குழுக்களில் இணைக்கப்பட்டுள்ளனர். மற்ற குடும்பங்கள் IVDP என்ற தொண்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களில் உள்ளனர். அனைத்து 108 குடும்பங்களும் சுய உதவிக் குழுக்களில் இணைக்கப்பட்டுள்ளனர்.

**சமுதாய நிறுவனங்கள் :** சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்றவை கடன் சுழற்சி (இணைப்பு), வங்கி இணைப்பு, வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், உள்ளாக்கம் போன்றவற்றின் அடிப்படையிலும் தரமுடன் விளங்குகின்றன.

72 சுய உதவிக் குழுக்களில் 13 மட்டும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நல்ல முறையில் செயல்படுகின்ற போதிலும், நிதி இணைப்புகள், பணச் சுழற்சியின் வேகம், தேவையறிதல் ஆய்வு ஆகியவற்றால் உறுப்பினர்களுக்கு இன்னும் கூடுதல் விழிப்புணர்வு தேவைப்படுகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடன்களைப் பலமுறை பெற்றுள்ளன. 5 சுய உதவிக் குழுக்கள் 7 முறை கடன் பெற்றுள்ளன. ஒரு சுய உதவிக் குழு வங்கிக் கடன் பெறவே இல்லை. IVDP தொண்டு நிறுவனத்தால் உதவி செய்யப்படும் சுய உதவிக் குழுக்களின் தரவுகள் / தகவல்கள் திட்ட செயலாக்க அணியிடம் இல்லை. தேவைப்படும் போது அவற்றைப் பற்றி ஆய்வுகள் மேற்கோள்ளலாம்.

**மகளிர் :** கிராமத்தில் நடைபெறும் தொழில்களில் மகளிரின் பங்கேற்பு, முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருள்களின் உற்பத்தியில் மகளிரின் பங்கு, மகளிரின் தலைமையில் மற்றும் முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், தொழில் செயல்பாடுகளில் மகளிரின் அனுபவ அறிவு மற்றும் ஆர்வம் ஆகியவற்றையும் கண்டறிய வேண்டும்.

விவசாயம், நாற்றங்கால் கவாத்து மற்றும் ஒட்டுப் பயிர், பால் உற்பத்தி,

தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் ஆகிய நடவடிக்கையில் மகளிர் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர். குடும்பங்களின் முக்கிய வாழ்வாதார நடவடிக்கைகளில் கிராமத்திலுள்ள 75% மகளிர் ஈடுபட்டுள்ளனர். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள மகளிர் கூறும்போது, குடும்ப வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மகளிரில் 50% நடவடிக்கைகள் மகளிர் தலைமையில் நடப்பதாகவும், முக்கிய முடிவுகளான என்ன பயிர் வளர்ப்பது என்பது போன்ற முடிவுகளை அவர்களே எடுப்பதாகவும் கூறுகின்றனர். பெரும்பாலும் நிலம் போன்ற சொத்துக்கள் கணவரின் (ஆண்கள்) பெயரில் மட்டுமே இருக்கும். அவை மகளிரின் உடமைகளாக இருப்பதில்லை. கணவன் மற்றும் மனைவி ஆகியோருக்கிடையே கூட்டாக சொத்துக்கள் உள்ளன என அணியால் உறுதி செய்ய முடியவில்லை. இது தொடர்பாக பின்னர் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் நிறுவனங்கள் / அமைப்புகள் : உள்ளாட்சி அமைப்புகளானது எந்த அளவிற்கு உதவிகரமாக உள்ளது என்பதையும், ஊராட்சியில் அது செய்த வாழ்வாதார வளர்ச்சிப் பணிகளையும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுடன் அது கொண்டுள்ள உறவுகளையும் அறிதல்.

கிராம ஊராட்சி மக்களுக்கு அதன் தலைவர் ஆக்கப்பூர்வமாகவும், உதவிகரமாகவும் இருக்கிறார். கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு அலுவலகம் ஒதுக்கித் தந்துள்ளதோடு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், சுகாதாரத் திட்டங்களில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். தற்போது உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாமல் உள்ளதால், கிராமத்தின் முக்கிய செயல்பாடுகளை மக்களும், அவர்களின் அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கமே மேற்கொள்கிறது.

**நிதி நிறுவனங்கள் :** நுண் நிதி நிறுவனங்கள், வட்டிக்காரர்கள், வியாபாரிகள் போன்றவர்களின் அணுகுமுறைகள் (Approach) மற்றும் அவர்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிதல்.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா மற்றும் கூட்டுறவு சங்க வங்கி ஆகிய இரண்டு முக்கிய வங்கிகள் கிராமத்தில் உள்ளன. போச்சம்பள்ளியில் பாங்க் ஆப் இந்தியா உள்ளது. வணிக வங்கிகள் மற்றும் ஊரக வங்கிகளால் (RRBs) வழங்கப்படும் கடன்கள் சராசரியாக 3 – 4 லட்சங்களாக உள்ளன.

கவாத்து மற்றும் ஒட்டுப் பயிர் வளர்ப்பு, நாற்றங்கால் பண்ணைகள், பால் வளர்ப்புத் தொழில் போன்ற வாழ்வாதாரத் தொழில்களுக்கும், உடல்நலம் (மருத்துவம்), கல்வி மற்றும் திருமணச் செலவுகள் போன்ற சொந்தத் தேவைகளுக்கும் முதன்மைக் கடன்களாகப் பெறப்பட்டிருக்கின்றன.

உடனடியாக அவசரமாகத் தேவைப்படும் கடன்களைப் பெறுவதற்காக உற்பத்தியாளர்கள் 15 (பதினைந்து) வட்டிக்காரர்களை அணுகியுள்ளனர். எல். அண்ட் டி, ரிலையன்ஸ், தென்பெண்ணை கிராம கோட்டை போன்ற நுண்நிதி நிறுவனங்கள் இப்பகுதியில் ஊடுருவி நுண்கடன்கள் வழங்கத் தொடங்கி உள்ளனர். ஆனால் அவர்களின் நடைமுறைகளையும், கடன் திட்டங்களையும் மக்கள் அறிந்திருக்கவில்லை.

**உள்கட்டமைப்பு :** மழை நீர் சேகரிப்பு, பாசன வசதிகள், சந்தைகள், கால்நடை விற்பனைச் சந்தை, கிடங்குகள், உலர்களம், மின்சார வசதிகள், சாலை வசதிகள் போன்றவற்றின் வகை, தரம், பயன்பாடு மற்றும் பயன்கள் பற்றி அறிதல்

- கிராமத்திற்கு நல்ல சாலை வசதிகள் உள்ளதால் போக்குவரத்து வசதிகள் நன்றாக உள்ளன. மின்சாரம் 24 மணி நேரமும் கிடைப்பதால் பல சிறு ஆடை தயாரிப்பு தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டு செயல்படுகின்றன.

- காட்டகரம் பெரிய சந்தையாக உள்ளது. இந்த ஊரிலிருந்து 20 கி. மீ. தொலைவில் போச்சம்பள்ளியில் தமிழ்நாட்டில் பொள்ளாச்சிக்கு அடுத்து இரண்டாவது பெரிய சந்தை உள்ளது. ஆடை விற்பனைச் சந்தை பெரிய அளவில் உள்ளது. வேளாண்மைச் சந்தையைப் பொருத்த மட்டில் பெரிய அளவில் ஆடு மற்றும் மாடு விற்பனைச் சந்தை உள்ளது.

- கிராமத்தில் 25 பால் கொள்முதல் செய்வோர் உள்ளனர். 5 தடுப்பணைகள் உள்ளன. தனியார் பால் நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் தனியார் பால் கொள்முதல் மற்றும்

குளிரூட்டும் நிலையம் ஒன்று கிராமத்திலிருந்து 15 – 20 கி.மீ. சுற்றளவில் உள்ளது.

**இயற்கை வளங்கள் :** இயற்கை வளங்கள் என்னென்ன? பல வகையான நிலங்கள் – விவசாய நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், நீர், காடுகள், மண்வளம் (தரம்) போன்றவை இதுபோன்ற வளங்களின் பயன்பாடு / கிடைக்கும் விதம், வளங்களின் தரம், எந்த வளங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன / பயன்படுத்தப்படாத வளங்கள், இயற்கை வளங்களைப் பற்றிய சமுதாய மக்களின் பார்வை (அ) கருத்து போன்றவை பற்றி அறிதல்.

மக்களால் எழுப்பப்பட்ட மற்றும் குழுவால் கவனிக்கப்பட்ட முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று தண்ணீர் பிரச்சனையாகும். 20 ஆண்டுகளுக்கு முன்னால் 60 அடி ஆழத்தில் கிடைத்த தண்ணீர் இப்போது ஆழ்துளைக் கிணறுகள் தோண்டி 600 அடி ஆழத்தில்தான் தண்ணீர் கிடைத்தாலும், இன்னும் தண்ணீர் பற்றாக்குறை / நெருக்கடி இருப்பதாக சில பெண்கள் கூறினர். கிரமத்தில் 5 ஏரிகள், 5 குளங்கள் மற்றும் 5 தடுப்பணைகள் உள்ளன. மேய்ச்சல் நிலம் என்று எதுவும் தங்கள் கிராமங்களில் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறினர். பாதுகாக்கப்பட்ட / ஒதுக்கப்பட்ட வனப்பகுதிக்கு அருகில் இந்தக் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில் 1117.63 ஏக்கர் வேளாண் நிலமும், 1600 ஏக்கர் புறம்போக்கு நிலமும் உள்ளன. மக்களிடம் இயற்கை வளங்கள் பாதுகாப்பு அம்சங்கள் பற்றி குழு விவாதித்தது. ஆனால் மக்களுக்கு அத்தகைய விழிப்புணர்வு இல்லை. அத்தகைய நடைமுறை நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்வதில்லை.

**வருமானம் பெருக்கும் தொழில்கள்**

சமுதாய மக்களுக்கு மிகவும் ஏற்ற முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருள் (Commodity) வருமானம் பெருக்குத் தொழில்களில் ஈடுபடுவதாகும். இதில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை, ஆண் / பெண் / தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் போன்றவர்களில் இத்தொழில்களின் முக்கியமாக ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை, இத்தொழில்களின் மூலம் கிடைக்கும் வருமான வரம்பு, இத்தொழில்களைப் பற்றிய மக்களின் பார்வை (வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் எதிர்காலம்), முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருள் முக்கிய பொருள் இல்லையாயின், அவை எவை? அல்லது அது எது? யார் அதில் ஈடுபட்டுள்ளார்கள்? அதன் மூலம் கிடைக்கும் வருமான வரம்பு என்ன? இத்தொழில்களைப் பற்றிய மக்களின் பார்வை (வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் எதிர்காலம்), அடையாளம் காணப்பட்ட பொருள்களில்

ஒன்று மாம்பழத் தோட்டம் ஆகும்.

இக்கிராமத்தில் மா வளர்ப்பு 500 ஹெக்டேரில் (HH) (மாம்பழத் தோட்டங்கள்) உள்ளன. 1–2 ஏக்கர் பரப்பளவுள்ள சிறிய தோட்டங்களிலும் மாம்பழம் விளைவிக்கப்படுகிறது. மா நாற்றங்கால் தொழில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பொருளாகவும், அதுவே முக்கியமாக நடைபெறும் தொழிலாகவும் இக்கிராமத்தில் உள்ளது. (1400 ஹெக்டேர் – HH). மிக நீண்ட காலமாக மா வளர்ப்பு தொழில் நிலையான நல்ல வருமானத்தை ஈட்டித் தருவதால் இத்தொழிலை வளமான வாழ்நாள் தொழிலாக (Evergreen Enterprises) மக்கள் கருதுகிறார்கள்.

மாம்பழ நாற்றங்கால் தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் போக சராசரியான செலவினங்கள் ரூ.9 இலட்சங்கள் ஆகும். மக்களின் கூற்றுப்படி இக்கிராமத்தினர் நூறாண்டுகளுக்கும் மேலாக இத்தொழிலைச் செய்து வருகிறார்கள். அவர்கள் மனப்பூர்வமாக இத்தொழிலோடு ஒன்றிப்போய் விட்டனர்.

பால் மாடு வளர்ப்பு என்பது மற்றுமொரு முக்கியமான, விருப்பமான மக்களின் தொழிலாகும். ஆனால் தண்ணீர் பற்றாக்குறை நிலவும் போது பயிர் விளைச்சல் குறைந்து போவதால் 1 – 2 பசு மாடுகள் வளர்ப்பதோடு மக்கள் நின்று விடுகின்றனர்.

### தொழில் நிறுவன செயல்பாடுகள்

கிராமத்தில் எவ்வாறு தொழில் முனைதலில் மக்கள் ஈடுபடுகிறார்கள் ? ஏன் ? முக்கிய தொழில் நிறுவனங்கள் என்னென்ன ? அத்தொழில் நிறுவனங்களின் உற்பத்தி அளவு என்ன ? அத்தொழில் நிறுவனங்கள் அங்கு எப்படி தோன்றின ?

ஒசூருக்கு அருகாமையில் இருக்கின்ற காரணத்தால் இக்கிராமத்தில் பாதுகாப்பு கையுறைகள், தொப்பிகள் தயாரித்தல் மற்றும் இவை போன்ற பிற ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் முக்கிய தொழில் நிறுவனங்களாக இங்கு தொடங்கப்பட்டுள்ளன. ஒசூரில் உள்ள இதுபோன்ற தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களே இங்கு இத்தொழில்களைத் தொடங்கினர். 24 மணி நேரமும் மின்சாரம் தடையின்றிக் கிடைப்பதாலும் இது சாத்தியமாயிற்று. பாதுகாப்பு ஆடைகள் தயாரிக்கும் தொழில் சொந்தமாகத் தொடங்கி நடத்திட இக்கிராமத்தில் வாழும் பல தொழிலாளர்கள் முடிவு செய்துள்ளனர். இந்த கிராமத்தில்

ஒரு ஆடை தயாரிப்பு தொழிற்சாலையும், சிறிய அளவில் ஆடை தயாரிப்பு அலகுகள் 10–ம் உள்ளன. இந்தச் சிறிய அலகுகளில் 5 – 10 தொழிலாளர்கள் சராசரியாக பணிபுரிகின்றனர்.

2 ஊறுகாய் தயாரிப்பு அலகுகள் இக்கிராமத்தில் உள்ளதை குழு கண்டறிந்தது. மற்றும் ஒரு தொழில் முனைவோர் இத்தொழிலில் ஈடுபட தொடங்கியுள்ளார் என்பதையும் குழு அக்கிராமத்திற்கு சென்றபோது கண்டது.

**சந்தை**

எங்கிருந்து பொருட்கள் வருகின்றன ? அந்தப் பொருட்கள் என்ன ? அவற்றின் அளவு என்ன ? கிராமத்தில் விளையும் / உற்பத்தியாகும் பொருட்கள் வெளியில் எங்கு செல்கின்றன. அவை என்னென்ன பொருட்கள் ? அவற்றின் அளவு என்ன ?

**மா நாற்றங்கால் / நாற்றுப் பண்ணை**

கிராமத்திலேயே மூலப் பொருளும், தொழிலாளர்களும் கிடைக்கின்றனர். அருகிலுள்ள மாம்பழச் சாறு தொழிற்சாலைகளில் இருந்து விதைகள் கிடைக்கின்றன. இக்கிராமத்தில் 47 சில்லறை விற்பனையாளர்களை இதற்கான சந்தை உருவாக்கியுள்ளது ஒரு ஒப்பீட்டு வளர்ச்சி ஆகும். மா நாற்றுக்களுக்கான சந்தை வாய்ப்புகள் நாடு முழுவதும் உள்ளன. மகாராஷ்ட்ரா, குஜராத், ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய பெரிய மாநிலங்கள் முக்கியச் சந்தை ஆகும். இருப்பினும், இவை கூட்டுப் பண்ணைகளாக இல்லாததால் மிகப் பெரிய மா விற்பனை உத்தரவுகளுக்கு நாற்றுகளை வழங்க இயலாது.

**ஆடை தயாரிப்பு**

ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி ஆடைகளை பெரும்பாலும் ஒசூரிலுள்ள ஆட்டோ தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்கின்றன. பெங்களூரு, புதுச்சேரி, இராணிப்பேட்டை மற்றும் சென்னை ஆகிய ஊர்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. மூலப் பொருட்கள் பல்வேறு வகைகளில் பெறப்பட்டாலும், திருப்பூர் நகரம் மிகப் பெரிய மூலப் பொருள் வழங்கும் ஆதாரமாக உள்ளது. காரணம் அங்கு கையுறைகள் போன்றவை தயாரிக்கப் பயன்படும் தொழிற்சாலை துணிக்கழிவுகள் பெருமளவில் கிடைக்கின்றன.

**பால் உற்பத்தி**

தனியார் நிறுவனங்களான திருமலா பால், ஐ–பால் மற்றும் அரசின் நிறுவனமான ஆவின் போன்ற நிறுவனங்கள் வாயிலாக பெங்களூரு, ஆந்திரா போன்ற பகுதிகளில் வெளிப்புற சந்தை வாய்ப்புகள் உள்ளன.

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளிலுள்ள தீவன உற்பத்தியாளர்களிடம் இருந்து கால்நடைத் தீவனங்கள் கிடைக்கின்றன. இவை அதிக விலையுள்ளதாக கிராமத்தினர் கருதுகின்றனர். அரசால் தொடங்கப்பட்டுள்ள தீவன வங்கிகள் முக்கிய தீவன விநியோகியாக இருந்தாலும் அவற்றால் கிராமத்தின் முழு தீவன தேவையையும் பூர்த்தி செய்ய முடியவில்லை.

**சமுதாய நிறுவனங்களின் விவரங்கள் (அவசியமானவை)**

| | | | |
|---|---|---|---|
| மொத்த மக்கள் தொகை | 8377 | சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 236 பேர் (*தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்*) + 826 பேர் (*IVDP தொண்டு நிறுவனம்*) = 1062 பேர் |
| மொத்த குடும்பங்கள் | 2455 | ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை | 2* |
| தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் | 108 | கூட்டமைப்பின் பெயர் | காட்டகரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு |
| பழங்குடியின குடும்பங்கள் | இல்லை | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்களின் எண்ணிக்கை | 13 |
| மகளிர் தலைமை குடும்பங்கள் | 142 | தொண்டு நிறுவன வழிகாட்டலில் / கட்டுப்பாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 59 |
| சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 72 | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் | IVDP |

** 1) 2 ஒத்தத் தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

- *மா நாற்றுப் பண்ணை ஒத்தத் தொழில் குழு – இது பதிவு செய்யப்பட்டு ரூ. ஒரு இலட்சம் நிதி பெற்றுள்ளது.*
- *பாக்கு மட்டை ஒத்தத் தொழில் குழு – இது நிதி ஏதும் பெறவில்லை.*

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / சுய உதவிக் குழுக்களுக்கான செயல் திட்டங்கள்**

1) 13 சுய உதவிக் குழுக்கள் மட்டுமே ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ளன. IVDP தொண்டு நிறுவனக் கட்டுப்பாட்டில் உள்ள 59 சுய உதவிக் குழுக்களை கூட்டமைப்பில் இணைப்பது சாத்தியமில்லை என்ற நிலை உள்ளது. அதன் புள்ளிவிபரப்படி குறைந்தது 1500 குடும்பங்களை சுய உதவிக் குழுக்களின் இணைக்க முடியும். திட்டக் பயனாளிகளாக உள்ள குடும்பங்களின் மகளிரை சுய உதவிக் குழுக்களின் இணைக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு இயங்க வேண்டும்.

2) கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பு விவரங்களை கூட்டமைப்பு பராமரிக்கவில்லை. எதிர் காலத்தில் குழு – வங்கிக் கடன் இணைப்புகளை அதிகப்படுத்துவது மற்றும் தேவை ஆய்வுகள் செய்வது ஒரு வழக்கமான செயல்பாடாக மாற வேண்டும்.

3) "கடன் பெறுவதற்கான நோக்கம்'' சரியாகப் பராமரிக்கப்படவில்லை. இது சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும். சமுதாய மக்களின் தேவையின் அடிப்படையில் நிதி உதவிகள் வழங்குவது பற்றியும், வாழ்வாதாரத் தொழில்கள் கொடுப்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விவரங்குலூ**

| பிரிவு | தொகை ரூ. / அலகு எண்ணிக்கை | பிரிவு | தொகை ரூ. / அலகு எண்ணிக்கை. |
|---|---|---|---|
| உள்கடன் வழங்குவதற்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வழங்கிய மொத்த மானியத் தொகை | 1,00,000.00 | கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்கள் | 13 |
| வங்கிகளிடமிருந்து பெற்ற பெருங்கடன் | பெறப்படவில்லை | கூட்டமைப்பில் இருந்து உள்கடன் பெற்ற சுய உதவிக் குழுக்கள் | 13 |
| கடன் பெற்ற வங்கித் தொகை அளவு | 2.20 கோடி (13 சுய உதவிக் குழுக்கள்) | உள் கடன் வழங்கப்பட்ட மொத்தத் தொகை | 1,23,5000.00 |
| வங்கிக் கடன் இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 70 | பெருங்கடன் பெற்ற சுய உதவிக் குழுக்கள் | பொருந்தாது |

**கடன் பயன்பாடு விவரங்கள்** (விவரங்கள் கிடைக்கவில்லை – பின்னர் சேர்க்கப்படும்)

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வேளாண்மை | | கால்நடை | |
| கடன் மீட்சி | | பண்ணை சாரா தொழில்கள் | |

| | | | |
|---|---|---|---|
| நுகர்வுக் கடன்<br>(சுகாதாரம், கல்வி ஆகியவற்றையும் சேர்த்து) | | வணிகத் தொழில்கள் | |
| மற்ற முக்கியமான கடன்கள் | | | |

**ஒத்த தொழில் குழுக்கள் பற்றிய விவரங்கள்**

| ஒத்த தொழில் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பொருள் / சார்புத் தொழில் | ஒத்த தொழில் குழுவின் செயல்பாடுகள் | ஒத்த தொழில் குழு பற்றிய விவரம் – உருவாக்கியவர், இதன் செயல்பாடுகள், இதன் தரம், இதன் செயல்பாட்டில் உறுப்பினர்களின் பார்வை, இதை தத்தெடுக்கும் / ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு, உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், இதன் முக்கிய தேவைகள் |
|---|---|---|---|---|
| காட்டா கிராம் மா ஒட்டு நாற்றுப் பண்ணை | 20 பேர் | மா நாற்றுப் பண்ணை | தொடக்க மற்றும் உள் கூட்டமைப்பு நிதி – ரூ. 1,00,000/ | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட 20 உறுப்பினர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இது ஆரம்பிக்கப்பட்டு 1 ஆண்டு ஆகிறது. இதன் உறுப்பினர்கள் சுய உதவிக் குழுவிலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளனர். இதுவரை இவர்களுக்கு பயிற்சி எதுவும் வழங்கப்படவில்லை. எதிர்காலத் திட்டம் (தொலைநோக்கு) எதுவும் தீட்டப்படவில்லை. |
| அன்னை தெரசா பாக்கு மட்டை உற்பத்தி ஒத்த தொழில் குழு | 20 பேர் | பாக்கு மட்டை தட்டு தயாரித்தல் | | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் உருவாக்கப்பட்ட இது தொடக்க நிலையிலேயே உள்ளது. இதற்கு பயிற்சிகள் எதுவும் வழங்கப்படவில்லை. (இதைப்பற்றிய விவரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்) |

## பொருள் – விவசாயம் (Commodites / Form)

| வ. எண். | பொருள் / சார்புத் தொழில் | உற்பத்தியாளர் எண்ணிக்கை (சராசரி) | செயல்பாட்டு அளவு ஏக்கர் / எண்ணிக்கை | உற்பத்தியாளர் குழு அமைக்க வாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | மா | 500 | 1500 ஏக்கர் | 5-8 |
| 2 | பால் உற்பத்தி | 1700 | 1700 குடும்பங்கள் | 12-20 |
| 3 | மா நாற்றுப் பண்ணை | 1400 | 1500 ஏக்கர் | 10-15 |

## தொழில் / சார்புத் தொழில் – பண்ணை சாரா தொழில்

| வ. எண். | தொழில்/ சார்புத் தொழில் | உற்பத்தியாளர் எண்ணிக்கை / அலகுகள் | செயல்பாடு அளவு | வாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | ஆடை தயாரிப்பு | பெரிய அலகு 1 சிறிய அலகுகள் 8 – 10 | 15–30 லட்சங்கள் மதிப்பிடப்பட்டுள்ளது | விரிவாக்க உதவிகள், புதிய தொழில் முனைவோர் உருவாகும் வாய்ப்புகள் |

**மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கண்டறியப்பட்ட பொருட்கள் / சார்புத் தொழில்வாரியான சிக்கல்கள் மற்றும் திட்ட உதவிகள் தேவைப்படும் பகு திகள்**

| பொருட்கள் / தொழில்கள் | கண்டறியப்பட்ட சிக்கல்கள் | செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் / செயல்பாடுகள் | அலகுகளின் எண்ணிக்கை | திட்ட உதவி (திட்டக் கூறுகள்) | ஒன்றிணைந்து செயல்படுதல் / கூட்டாண்மை | எதிர்பார்க்கப் படும் முதலீடுகள் (ரூ.) (கூர்ந்து நோக்கியபடி) |
|---|---|---|---|---|---|---|
| **1**<br><br>**பால் பண்ணை / பால் உற்பத்தி** | | மருத்துவ முகாம் | ஆண்டிற்கு இரண்டு முகாம்கள் | | கால்நடை பராமரிப்புத் துறை | கால்நடை பராமரிப்புத் துறை மூலம் ஏற்கனவே நடந்து வருகிறது |
| **2** | உற்பத்தியாளர்கள் அழைக்கும் போதும் உடனடியாகவும் கால்நடை மருத்துவர்கள் சேவை புரிய வருவதால், அவர்கள் இம் மருத்துவர்கள் மீது பெரிய அளவில் நம்பிக்கை கொண்டிருப்பதாலும், அவர்களுக்கு வழங்கப்படும் கட்டணம் அதிகமாக உள்ளது. | இளைஞர் களுக்கு செயற்கை கருவூட்டலுக் கான பயிற்சி வழங்குவதன் மூலம் குறைந்த மதிப்பூதியத் தில் சேவை கிடைக்கும் | மூன்று கிராமங் களுக்கு ஒருவர் | ஆக்கக் கூறுகள் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் செயற்கை கருவூட்டல் பயிற்சி வழங்குதல் | கால்நடை பராமரிப்புத்துறையால் உள் கட்டமைப்பு | |
| **3** | ஒரு நாளைக்கு 20 லிட்டர் பால் உற்பத்தி செய்து லிட்டருக்கு ரூ. 22/– விலையாகப் பெறுகிறார்கள். தனியார் பால் கொள்முதல் / சேகரிப்பு நிலையங்களான ஆரோக்யா, திருமலா மற்றும் ஆவின் | பால் குளிரூட்டும் நிலையம் (MCC – Milk Chilling Centre) | இரண்டு | தேவையான உபகரணங் கள் வழங்குதல் | ஆவின் / தனியார் பால் நிறுவனங் களின் உதவியோடு உபகரணங் கள் பெறுதல் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகியவற்றிற்கு நேரடியாக வழங்குகிறார்கள். | | | | | |
| **4** | பால் உற்பத்தியாளர்களிடம் 1 – 2 பால் மாடுகள் மட்டுமே உள்ளன, | பசு மாடு வாங்கி / சொத்து உருவாக்க நிதி உதவி செய்தல் | உற்பத்தி யாளர் குழு (PG) உறுப்பினர் களின் தேவையின் அடிப்படை யில் | கூறு 1 : தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் ஊக்கப்படுத் தப்பட்டு ஏற்கனவே உள்ள மக்கள் அமைப்புகள் மூலம் கூட்டாண் மையை ஏற்படுத்துதல் | கால்நடை பராமரிப்புத் துறை திட்டங்கள் போன்றவை | |
| **5** | பால் உற்பத்தியாளர்கள் ஒரு நாளைக்கு 20 லிட்டர் பால் உற்பத்தி செய்து, லிட்டருக்கு ரூ. 22/– விலையாகப் பெறுகிறார்கள். தனியார் பால் சேகரிப்பு நிலையங்களான ஆரோக்யா, திருமலா, ஆவின் போன்ற நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்குகிறார்கள். அருகில் உள்ள கிராமத்தில் பால் குளிரூட்டும் மையம் உள்ளது. பால் உற்பத்தியை ஆய்வு செய்து வட்டார அளவில் பால் குளிரூட்டும் மையம் அமைப்பதற்கு திட்டமிடலாம். | பால் குளிரூட்டும் நிலையம் நிறுவுதல்.<br><br>(உற்பத்தியாளர் குழுமம் / நிறுவனம் மற்றும் தொழில் முனைவோர் முறையில்) | பால் உற்பத்தி அளவின் அடிப்படையில் | ஈடான மானிய நிதி உதவிகள் / கடன் / உற்பத்தியாளர் குழுமம் / நிறுவன திட்ட நிதி உதவிகள் | தனியார் பால் கொள் முதல் நிறுவனங் கள் / மாநில சமர்சீர் வளர்ச்சி நிதி (SBGF) / மானிய நிதி ஆகிய வற்றைப் பெறுதல் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மா நாற்றுப் பண்ணை<br><br>1 | தோட்டக்கலைத் துறை மற்றும் தொடர்புடைய முகமைகள் வாயிலாக பரப்பப்பட்ட 'வேர்க்கம்பம்' (Root Stock) முறையை விட தாங்கள் அறிந்த எபி ஒட்டுப்பயிர் முறையை மா நாற்று உற்பத்தியாளர்கள் கடைப்பிடிக்கிறார்கள். துறையின் முறை மூலம் செய்து கிடைக்கும் உற்பத்தி வெற்றி விகிதம் 70%–ஐக் காட்டிலும் தங்களின் முறை 90% வெற்றி விகிதம் தருவதாக அவர்கள் கூறுகின்றனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அவர்கள் இம்முறையைப் பின்பற்றி வருகின்றனர். மேலும் அவர்கள் இம்முறையை மாற்றி மாநாற்று உற்பத்தி செய்வதை விரும்பவில்லை. தொழில் நுட்ப ஆலோசனைக் குழு (TAG) ஆலோசனைகளும் அவர்களின் உதவியும் பெற வேண்டும். | நல்ல திறம் வாய்ந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திட பயிற்சிகள் வழங்குதல்<br><br>எ.கா. ஒட்டுப் பயிர் முறை போன்றவை | ஆண்டிற்கு<br><br>2 – 3 முறை | கூறு 1 தொழில்நுட்ப ஆலோசனைகள்<br><br>கூறு 3 சமுதாயப் பண்ணை பள்ளி (CFS) | தோட்டக் கலைத்துறை / ஜெயின் இர்ரிகேஸன் போன்ற தனியார் நிறுவனங் கள் / ஆராய்ச்சி நிறுவனங் கள் மற்றும் கல்வி நிறுவனங் கள் | |
| **2** | நேரடி விளக்கமுறைப் பயிற்சிகளுக்காக (Demo) எந்தவொரு துறையையும் அவர்கள் (உற்பத்தியாளர்) அணுகியதில்லை. மனித ஆற்றல் மேம்பாட்டு நிறுவனங்கள் (HRI) | புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திப் பார்த்தல் | ஆண்டிற்கு<br><br>2 – 3 முறை | கூட்டாண்மை முறைகள் | நீர்ப்பாசன / ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங் கள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அத்தகைய பயிற்சிகளை நடத்தினாலும் அப்பயிற்சிகளுக்கு அவர்கள் சென்றதில்லை எனவும், தங்கள் ஊரிலும் அத்தகைய பயிற்சிகள் நடந்த போதிலும் அதில் கலந்து கொள்ளவில்லை எனவும் கூறினர். | | | | | |
| **3** | தண்ணீர் பிரச்சினை கிராமத்தின் முக்கியப் பிரச்சனையாக உள்ளது. மேலும் நிலத்தடி நீரும் கீழே சென்று விட்டது. சில விவசாயிகள் மட்டுமே சொட்டுநீர் பாசன வசதி பெற்றுள்ளனர். பெரும்பாலும் குளம், ஏரி போன்ற நீர்ப்பாசனங்களையே சார்ந்துள்ளனர். | தண்ணீரை ஆக்கப்பூர்வ மாக பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் | உறுப்பினர் களின் தேவை களுக்கேற்ப | கூறு 1 தொழில்நுட்ப ஆலோசனை – ஒருங் கிணைந்து செயல்படுதல் மற்றும் கூட்டாண்மை | நீர் வள மற்றும் நீர்ப்பாசனத்துறை / தொடர் புடைய திட்டங்கள் (IAMWARM) | |
| **4** | கூட்டுப் பண்ணைகள் முறை முயற்சி மேற்கொள்ளப்பட வில்லை. உற்பத்தியாளர்கள் தங்களால் பெரிய அளவிலானத் தேவைகளுக்கு உற்பத்தி செய்து உத்தரவுகளை வழங்க இயலாது இருக்கின்றனர். அவர்கள் பெரிய அளவிலான உற்பத்தியாளர்களிடம் விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு நல்ல சந்தை விலை கிடைக்காத நிலையை அடைகின்றனர். | அறுவடைக்குப் பின் கூட்டாக சந்தைப் படுத்துதல் | 10 – 15 உற்பத்தி யாளர் குழுக்கள்<br><br>1 – உழவர் உற்பத்தி யாளர் நிறுவனம் | கூறு 1<br><br>தொழில் நிறுவன மேம்பாடு / ஊக்கம் | SFAC/NABKISAN போன்ற தொடர்பு டைய நிறுவனங் கள் / முகமைகள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **5** | நிதிப் பற்றாக்குறை காரணமாக உற்பத்தியாளர்கள் தங்கள் நில வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று கூறினர். நிதிப்பற்றாக்குறை காரணமாகவே நாற்றுப் பண்ணைத் தொழிலை பல கட்டங்களாக செய்கின்றனர். | தொழில் வளர்ச்சியைப் பெற உரிய நிதி உதவிகளைப் பெறுதல் | உறுப்பினர் களின் தேவைக்கு ஏற்ப | கூறு **1**<br><br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் உருவாக்கப் பட்ட மக்கள் அமைப்புகள் மூலமாக பல்வேறு துறை / திட்ட ஒருங் கிணைப்பை ஏற்படுத்துதல் | தோட்டக் கலைத்துறை மானியத் துடன் வழங்கும் செயல்பாடு கள் / வங்கி நிதி உதவிகள் | |
| **மாங்கனி (மாம்பழம்) 1** | பயிற்சிகள் மற்றும் செய்முறைப் பயிற்சி (நேரடி விளக்கம்) | பயிற்சிகள் மற்றும் நேரடி விளக்கம் மூலமாக அதிக மகசூல் தரும் நாற்றுகள் / முறைகளைப் பின்பற்றுதல் | ஆண்டுக்கு<br><br>2 – 3 | கூறு **1** தொழில் நுட்ப ஆலோனை<br><br>கூறு **3**<br><br>சமுதாயப் பண்ணை பள்ளி | தோட்டக் கலைத்துறை / ஜெயின் இர்ரி கேசன்ஸ் போன்ற தனியார் நிறுவனங் கள் / ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங் கள் | |
| **2** | பயிற்சிக்கான வசதிகள் குறைவு / தோட்டப் பராமரிப்பில் துறையின் உதவிகள் | தோட்டப் பராமரிப்பாளர் பயிற்சி<br><br>அறுவடை முறைகளும், தொழில் நுட்பமும் பற்றிய பயிற்சி | ஆண்டுக்கு<br><br>2 – 3 | கூறு **1**<br>தொழில் நுட்ப ஆலோசனை ஒருங் கிணைந்து செயல்படுதல் மற்றும் கூட்டாண்மை<br>கூறு **3**<br>சமுதாயப் பண்ணை பள்ளி (CFS) | தோட்டக் கலைத்துறை / தேசிய தோட்டக் கலை இயக்கத் தின் திட்டங்கள் / ஜெயின் இர்ரி கேசன்ஸ் போன்ற தனியார் நிறுவன ஆராய்ச்சி நிறுவனங் கள் / ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | சொட்டு நீர்ப்பாசனம், சிறு விவசாயிகளுக்கு சிறிய நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப் பெறவில்லை. கூட்டாண்மை நிறுவன முறையானது 4 – 5 விவசாயிகளுக்கு கூட்டாக / சொட்டு நீர்ப்பாசனத் திட்டத்தை அடைய உதவி செய்தது. | தண்ணீரை ஆக்கப்பூர்வ மாகப் பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் | உறுப்பினர் களின் தேவையின் அடிப்படை யில் | கூறு 1<br><br>ஒருங் கிணைந்து செயல்படுதல் மற்றும் கூட்டாண்மை | நீர்வள மற்றும் நீர்ப்பாசனத் துறை / வங்கி நிதி உதவிகள் / மற்ற தொடர் புடைய திட்டங்கள் (IAMWARM) | |
| 4 | சந்தைப் பற்றிய விழிப்புணர்வு – ஆந்திர பிரதேச மாம்பழங்கள் சந்தைக்கு முதலில் விற்பனைக்கு வந்து நல்ல விலை பெறுகின்றன. ஆனால் நம் மாம்பழங்கள் சந்தையில் கொட்டிக் கிடக்கும் நிலையில் காலதாமதமாக விற்பனைக்கு விலை பெறுகின்றன. | கூட்டாக அறுவடை செய்து சந்தைப் படுத்துதல் | சராசரியாக<br><br>5 – 7 | கூறு 1<br><br>தொழில் நிறுவன மேம்பாடு / ஊக்கப் படுத்துதல் | ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங் கள் | |

## தொழில் நிறுவனங்கள் (நிலை மற்றும் வாய்ப்புகள்)

| பொருள் | பெருமளவில் நடை பெறும் தொழில் நிறுவனங்கள் | தொழில் நிறுவனத்தின் தற் போதைய நிலை | தொழில் நிறுவனத்தின் எண் ணிக்கை | தொழில் நிறுவன வகை | மகளிர் தலைமையில் தொழில் நிறுவனங் களின் வாய்ப்பு நிலை | பசுமை தொழில் நிறுவனங் களின் வாய்ப்பு நிலை | இந்த வகையான தொழில் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் எண்ணிக்கைக்கு / வளர்ச்சிக்குப் பின்னும் உள்ள காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| மாம்பழம் | ஊறுகாய் உற்பத்தி செய்தல் | விரி வாக்கம் மற்றும் வளர்ச்சிக்காக நடவடிக் கைகள் (தற்போது உள்ளபடி) | 2க்கும் மேற்பட்ட நுண் தொழில் அலகுகள்உள்ளன | குறு / சிறு தொழில் வகை | ஆம் | ஆம் – சூரிய ஒளி ஆற்றல் அலகு | ஒப்பீட்டளவில் மூலப் பொருட்கள் கிடைப்பது மிக எளிதானது. தனிநபர் ஊறுகாய் உற்பத்தி அலகுகளுக்கு விரிவாக்கத்திற்கான உதவிகளும், சந்தை வாய்ப்புக்கான வசதிகளும் கிடைக்கின்றன. |
| | மாம்பழக் கூழ் அலகு | புதிய வாய்ப்பு கள் உள்ளன | **1** மதிப்பிடப்பட்டுள்ளது | குறு / சிறு தொழில் வகை | ஆம் | ஆம் – சூரிய ஒளி ஆற்றல் அலகு | மூலப் பொருட்கள் தேவையின் அடிப்படையில் எளிதாக கிடைப்பது. |
| | வகைப் பிரித்தல், தரம் பிரித்தல், சொத்தை நீக்கம் போன்ற செயல் முறைகள் | புதிய வாய்ப்பு கள் | 3 மதிப்பிடப்பட்டுள்ளது | தனி நபர் தொழில் வகை | ஆம் | | வகைப் பிரித்தல், தரம் பிரித்தல் போன்ற செயல்முறைப் பற்றி உற்பத்தியாளர் களிடையே விழிப்புணர்வு இல்லாததால், அவர்களுக்கு அவ்வாறு பிரித்து விற்பனை செய்யும் பொருளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதும் தெரியவில்லை. இந்த வகையான செயல் முறைகள் தற்போது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | இடைத்தரகர்களால் செய்யப்படுகின்றன.<br><br>தற்போது வகை பிரிக்கப்படாத, தரம் பிரிக்கப்படாத மாம்பழங்களே விற்பனை செய்யப்படுகின்றன. மாம்பழம் சேகரிப்போர் / விற்பனையாளர்களுக்கு குறிப்பிட்ட சில உற்பத்தியாளர்கள் மாம்பழத் தோட்டங்களை குத்தகைக்கு கொடுக்கிறார்கள். |
| **பால் பண்ணை (பால் உற்பத்தி)** | பால் பண்ணைக்கான தீனி, தீவனம், மருந்துக்கடை போன்றவை | புதிய வாய்ப்பு கள் | 1 – 2 | தனிநபர் / குறு / குழு தொழில் நிறுவனங்கள் | ஆம் | ஆம் | கலப்புத் தீவன தொழில் அலகு புதிதாக தொடங்க வாய்ப்புகள் உள்ளன. காரணம் தற்போது அவர்கள் 30 கிலோ கொண்ட 1 மூட்டைக்கு ரூ. 850/– விலை கொடுக்கிறார்கள். குறைந்த விலையில் தீவனம் கிடைப்பது அவர்களின் தற்போதைய தேவையாக உள்ளது. புதுவாழ்வுத் திட்டம், TNSRLM ஆகிய திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள தீவன உற்பத்தி ஆலைகளில் கூட்டாண்மை சேர வாய்ப்புகளைப் பார்க்க |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வேண்டும் |
| | கால்நடை தீவன உற்பத்தி | புதிய வாய்ப்பு கள் | வட்டார முதலீட்டுத் திட்ட முடிவுப்படி | தனி நபர் / குழு தொழில் நிறுவனங்கள் | ஆம் | ஆம் | வட்டார அளவிலான ஆய்வுகளின் அடிப்படையில் குழுத் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட வேண்டும். |
| | கால்நடை களப் பணி யாளர் சேவைத் தொழில் கள் | புதிய வாய்ப்பு கள் | 1 | தனி நபர் குறுந் தொழில் (Nano) | ஆம் | ஆம் | அழைக்கும் போதெல்லாம் கால்நடை மருத்துவர்கள் மிக எளிதில் கிடைப்பதால் அவர்களை மிக அதிகமாக நம்புகிறார்கள் / மதிக்கிறார்கள். மருத்துவர்களுக்கு கொடுக்கும் கட்டணம் அதிகமாக இருப்பதால் கால்நடை களப் பணியாளர்களை உருவாக்கும் வாய்ப்புகள் உள்ளன. |
| | உற்பத்தி யாகிற பொருட் களுக்கு மதிப்புக் கூட்டுல் | புதிய வாய்ப்பு கள் | மொத்தத் தொழில் முன்னேற்றம் (TBD) | தனி நபர் / உற்பத் தியாளர் குழு மங்கள் | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மா நாற்றுப் பண்ணை** | சில்லறை விற்பனை | விரி வாக்கம் மற்றும் வளர்ச்சிக்கான நடவடிக் கைகள் (தற்போது உள்ளபடி) | 40 | தனி நபர் / குறுந் தொழில்கள் | | | உற்பத்தியாளர் குழு (PG), தொழில் குழு (EG) அடிப்படையில் |
| **ஜவுளித் தொழில்** | பாதுகாப்பு கையுறை கள் மற்றும் பாதுகாப்பு ஆடைகள் தயாரிக் கும் அலகுகள் | விரிவாக் கம் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்பு கள் (தற்போது உள்ளபடி) | 1 பெரிய அலகு<br><br>தோராய மாக 10 சிறிய அலகுகள் | தனி நபர் / சிறு தொழில் வகை | TAG மற்றும் ESMF வாயிலாக ஆய்வு தேவை | இரண்டு புதிய ஆடை தயாரிப்பு நிறுவனங் களுடன் கலந்துரை யாடியதில் புதிய வேலை வாய்ப்புகளுக்கு மிக அதிக வாய்ப்புகள் உள்ளதை அறிய முடிந்தது. அவர்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதோடு, இத் தொழிலை நடுத்தர தொழில் வகையி லிருந்து சிறு தொழில் வகைக்கு முன்னேற் றிடவும் திட்ட மிட்டுள்ளனர் | தனி நபர் / உற்பத்தியாளர் குழுமங்கள் |
| | | | | | | | |

| பொருள் | திறன் மேம்பாட்டு தேவைகள் | | |
|---|---|---|---|
| மா நாற்றுப் பண்ணை | தொழில் நுட்ப ரீதியாக | மேலாண்மை ரீதியாக | தொழில் முனைதல் ரீதியாக |
| | நவீன ஒட்டுப் பயிர் தொழில் நுட்பம் | தொழில் கருவிகள் மற்றும் அவற்றை வழங்குதலில் தொடர் மேலாண்மை (விநியோக தொடர் மேலாண்மை) | தொழில் மேலாண்மைப் பயிற்சி (EMT) |
| | பல வகையான தொழில் நுட்பங்களை தேர்வு செய்தல் | | |
| | மேம்படுத்தப்பட்ட / திறமையான நீர்ப்பாசனத் தொழில் நுட்பம் | | |
| மாம்பழம் | மாம்பழத் தோட்ட மேலாண்மை | தொழில் கருவிகள் மற்றும் அவற்றை விநியோகத் தொடர் மேலாண்மை (உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்தல்) | தொழில் மேலாண்மைப் பயிற்சி / தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டம் (EMT / EDP) |
| | அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் | தொழில் நிறுவனத்தை மேலாண்மை செய்தல் – வணிக ரீதியான திறன்கள் | |
| | உற்பத்தி செயல்பாடுகள் மற்றும் மதிப்பு கூட்டு தொழில் திறன் பயிற்சிகள் | | |
| பால் பண்ணை (பால் உற்பத்தி) | கால்நடை மருத்துவம் மற்றும் ஊட்டச் சத்து சார்ந்த பயிற்சிகள் | தொடர்புடைய தொழில் நிறுவன மேலாண்மை (எ.கா. பால் குளிர்வூட்டு மையம், பால் கொள்முதல் மையம், கால்நடை தீவனங்கள் போன்றவை) | தொழில் மேலாண்மைப் பயிற்சி / தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டம் (EMT / EDP) |
| | பால் மாடுகளைத் தேர்வு செய்தல் மற்றும் வளர்த்தல், கிடாரிக் கன்றுக் குட்டி மேலாண்மை | | |
| | கால்நடை களப் ணியாளர்களுக்கு திறனூட்டுதல் | | |
| | உற்பத்தி செயல்பாடுகள் மற்றும் மதிப்புக் கூட்டுத் திறன் தொழில் பயிற்சிகள் | | |

## (5) நிதி முதலீடுகள் / நிதி செலவினங்கள்

| விவரங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | தொழில் பிரிவு / பொருள் | ஓர் ஆண்டிற்கான முதலீடு (திட்டம்) (ரூ.) | மதிப்பிடப்பட்ட முதலீடு (மொத்தம்) |
|---|---|---|---|---|
| ஒத்தத் தொழில் குழு தொடக்க நிதி | 35 (சராசரி அளவாக) | மாம்பழம் / மா நாற்றுப்பண்ணை, பால் பண்ணை | 75,000 | 75,000* 35 = **26,25,000 / ரூபாய்** |
| ஒத்தத் தொழில் குழுக்களின் மற்ற தேவைகள் | | | | |
| சமுதாயப் பண்ணை / திறன் பள்ளி | 2 | மா நாற்றுப் பண்ணை / மாம்பழத் தோட்ட மேலாண்மை | xxxx | |
| புதுமைத் திட்டம் | | | | |
| தொழில் நிறுவனத்திற்கான ஈடான மானிய நிதி (N) தனிநபர் தொழில் | 10 | பால் பண்ணை / மா / ஜவுளி | 90,000/- | 90,000 x 10 = 9,00,000/- |
| தொழில் நிறுவனத்திற்கான ஈடான மானிய நிதி (M) தனிநபர் தொழில் | 4 | ஆடை தயாரிப்பு / மா | 3,00,000 | 3,00,000 x 4 = 12,00,000/- ரூபாய் |
| தொழில் நிறுவனத்திற்கான ஈடான மானிய நிதி (S) சிறு தொழில் | 1 | ஆடை தயாரிப்பு | 6,90,000 (23 இலட்சத்தில் *30%)* | 6,90,000 x 1 = 6,90,000/- ரூபாய் |
| **மொத்தம்** | **52** | | | **54,15,000** |

சமுதாய மக்களால் கூறப்பட்ட அல்லது  மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்புக் குழுவால் அறியப்பட்ட ஏதேனும் பிற கருத்துகள்



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

அன்னை தெரசா மகளிர் வளாகம்
2வது தளம்,
வள்ளுவர்கோட்டம்,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.